முகப்பு:
நூறாண்டுகள் நிறைவுடன் வாழ்ந்து
இறைவரோடு இறைவராகி திருவருள்புரியும்
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரசுவதி சுவாமிகள்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை.
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை.
சென்னை — 600 034.
தொலைபேசி எண்: 8279407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.

| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2025 ஸ்ரீமுக ஆண்டு தை | மணி: |
|---|---|---|
| 36 | ஜனவரி 1994 விலை ரூ. 3-00 | 1 |

## திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

*உயர்திரு ஆணையர் அவர்கள்*
*இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை*
*சென்னை — 600 034*

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

தமிழிசைச் சங்கத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிய சிறப்புரை.

மயிலையில் திருவள்ளுவர் விழா

அலங்கார நாயகன்
—கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

ஆடவல்லான்
—கோயிற்கலைச் செல்வர் தி. இராசமாணிக்கம்

தேவார மூவர் இசைத் தொண்டு
—டாக்டர் த. அமிர்தலிங்கம்

பன்னிரு ஆழ்வார்கள்
— டாக்டர் பருத்தியூர் சந்தானராமன்

அருள்நெறி காட்டிய அமைச்சர் சேக்கிழார்
—கோவூர் தாசன்

சென்றூதாய் கோத்தும்பி
—சிங்கம்பட்டி இராஜா

தருமம் காக்கும் சக்தியின் வடிவம்
—கவிஞர் டாக்டர் கரு. நாகராஜன்

## நல்வாழ்த்துகள்

**திருக்கோயில் வாசகர்களுக்கு**

**1994 புத்தாண்டு மற்றும் பொங்கல்**

**நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.**

# தமிழிசைச் சங்கத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆற்றிய சிறப்புரை

1943-ஆம் ஆண்டு செட்டி நாட்டரசர் ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் தமிழ் இசை மறுமலர்ச்சியில் நாட்டம் கொண்ட சில தமிழ் அறிஞர்களோடு இணைந்து துவக்கி வைத்த 'தமிழ் இசைச் சங்கம்' இசை நிகழ்ச்சிகளை நடத்தி, மக்களை மகிழ்விக்கின்ற ஒரு சாதாரண அமைப்பாக மட்டும் இல்லாமல் தமிழ் மொழியின் மேன்மையையும் தமிழ் சமுதாயத்தின் பண்பாட்டுச் செழுமையையும், தன்னிகரற்ற இசைத் தமிழின் பெருமையையும், உலகிற்கு உணர்த்தும் ஓர் எழுச்சிமிகு இசை இயக்கமாக வளர்ந்துள்ளது.



இசையினால் ஈர்க்கப்படாதவர் எவரும், மனித வாழ்வில் சிறந்த பண்புகள் பலவற்றை முழுமையாக உணர இயலாதவர்கள் என்பதே எனது கருத்து.

மனம், வாக்கு, காயம் என்கிற மூன்று உயிர்நிலைகளையும், அமைதிப்படுத்தி அவற்றை 'இசைவு' கொள்ளத்தக்க நிலையை, உருவாக்கும் ஆற்றல் படைத்ததுதான் 'இசை' என்ற கருத்தை, நாம் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும்.

ஆகவே, மக்களை ஒற்றுமைப்படுத்தும் பெரும் சக்தியைத், தன்னகத்தே கொண்ட 'இசை'யினை மொழி என்ற ஒரு சிறு வட்டத்துக்குள் அடைத்துவிடக் கூடாது. இசைக்கு மொழி என்ற எல்லை கிடையாது என்ற பொதுவான கருத்தை ஒப்புக்கொள்ளும் நாம் அதே நேரத்தில் மொழி இல்லாமல் இசை இயங்க இயலும் என்ற கருத்தையும் முழுமையாக ஏற்றுக் கொள்ள இயலாது.

இன்றைக்குக் கர்நாடக சங்கீதம்' என்ற பெயரால் வழங்கப் பெற்று வரும் இசை மரபு இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னரே வளர்ச்சியுற்ற இசை வடிவமாகத் திகழ்ந்த தமிழ் இசையின் தற்கால வடிவமே என்பது பல ஆன்றோரின் கருத்து.


ஏனென்றால் தமிழ் மொழியின் இலக்கியச் செறிவுக்கு எப்படி ஒரு நீண்ட நெடிய வரலாறு உண்டோ அப்படியே இசைத் தமிழுக்கும் நீண்டதொரு பாரம்பரியமும் செழுமையான வரலாறும் உண்டுஎன்பதைப் பழந்தமிழ் இலக்கியங்கள், நன்கு எடுத்துக் காட்டுகின்றன. வேறு எந்த மொழியிலும் இல்லாத சிறப்பு, தமிழ் மொழிக்கு உண்டல்லவா!

இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத் தமிழ் என்று மொழியை முப்பெரும் பிரிவுகளாக பிரித்து, மொழியோடு இசையை, ஒன்றச் செய்த பாங்கினை நினைந்து, நினைந்து மகிழ வேண்டியவர்கள் நாம். 'தொல்காப்பியம்' முதற்கொண்டு எண்ணற்ற சங்க கால இலக்கியங்கள், 'முத்தமிழ்க் காப்பியம்' என்று புகழப்படும் சிலப்பதிகாரம்' போன்ற காலத்தால் அழியாத காப்பியங்கள் இன்றும் 'தமிழிசை'யின் பெருமையினை உணர்த்துகின்றன.

இடைக்காலத்தில் நாயன்மார்களால் பாடப்பெற்ற தேவாரம், திருவாசகம் போன்ற சைவத் திருமுறைகளும், வைணவ நெறியைச் சார்ந்த சமயப் பெரியோர்களாகிய, ஆழ்வார்கள் அருளிய நாலாயிர திவ்விய பிரபந்தம் போன்ற வைணவ பாடல் தொகுப்புகளும், தமிழ் இசையைப் போற்றி வளர்த்து. தமிழ் மொழியில் தமிழ் இசையில் உள்ள தெய்வீகத்தை நமக்கு அளித்துள்ளன.

அதன் பின்னர் அருணகிரிநாதர் அருளிய ஓசை நயம் கொண்ட திருப்புகழ், இராமலிங்க அடிகளார் படைத்த திருவருட்பா மற்றும் அருணாசலக் கவிராயர், திரிகூடராசப்ப கவிராயர் போன்றவர்கள் இயற்றிய இசைப் பாடல்கள் அண்மைக் காலத்து தமிழ் இசை வளர்ச்சிக்குச் சான்றுகள் ஆகும்.

அதே போன்று தற்கால தமிழ் இலக்கிய மரபில் வேதநாயகம் பிள்ளை, மகாகவி பாரதி



**மயிலை திருவள்ளுவர் ஆலயத்தில் 15-1-94 அன்று பேராசிரியர் டாக்டர் தி. இராசகோபாலன் அவர்கள் தலைமையில் ''திருவள்ளுவர் பெரிதும் சிறப்பித்திருப்பது பெண்டிரையா? ஆடவரையா?'' என்ற தலைப்பில் பட்டிமன்றம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. டாக்டர் கரு. நாகராசன் ''திருக்கோயில்'' ஆசிரியர் டாக்டர் த. அமிர்தலிங்கம், டாக்டர் அரங்க இராமலிங்கம், டாக்டர் திருமதி சாரதா நம்பியாரூரன், டாக்டர் சுதாசேஷைய்யன், திருமதி பாரதி ஆகியோர் பங்கேற்றனர். திருவள்ளுவர் பெரிதும் சிறப்பித்திருப்பது பெண்டிரையே என நடுவர் தீர்ப்பு வழங்கினார்.**

யார், கோபாலகிருஷ்ண பாரதி, சுத்தானந்த பாரதி, பாபநாசம் சிவன், பாவேந்தர் பாரதி தாசன் போன்றோர் தங்களது உணர்ச்சியூட்டும் கவிதைகளால் தமிழிசை மரபினை தொடர்ந்து கடைப்பிடித்தார்கள்.

சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் தமிழ் இசை வழக்குகள் இன்று கர்நாடக இசையில் பின்பற்றப்படும் இசை வழக்குகள் போன்றே விளங்குவதை இசை பயின்றவர்கள் நன்கு அறிவார்கள்.

தமிழ் இசை மரபு என்பது இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இசைத் தமிழ் வடிவங்கள் எழுதப்பட்ட இலக்கியங்கள் வாய்மொழியால் வழங்கப்பட்ட பாடல் இலக்கியங்கள் ஆகியவற்றின் மூலம், வழி வழியாக வழங்கப் பெற்று வந்துள்ளது என்ற உண்மையை அறிந்து, நாம் மகிழ்ச்சி கொள்ளலாம்.

தமிழ் இசையை வளர்த்து அதன்பெருமை மிக்க பாரம்பரியத்தை வருங்கால தலைமுறையினருக்கு விட்டுச் செல்லும் பணியில், தமிழ் கூறும் நல்லுலகம் ஈடுபடும்போது பிறமொழிப் பாடல்களைப் புறக்கணிப்பதாகப் பொருளாகி விடாது.


எல்லா இசை மரபுகளும் அதன் சிறப்பம்சங்களுடன் காப்பாற்றப்பட வேண்டும் என்பதே நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

தமிழ் இசை சங்கம், அறிஞர்களுக்கும் தமிழ் இசை வல்லுநர்களுக்கும் இசைப் பேரறிஞர் பட்டங்களை ஆண்டுதோறும் வழங்கிச் சிறப்பிக்கும் பெருமைக்குரிய மரபினை பின்பற்றி வருகிறது. இந்த ஆண்டு நாதஸ்வர இசை மேதை, ஷேக் சின்ன மவுலானாவுக்கு, தமிழ் இசைச் சங்கத்தில் இசைப் பேரறிஞர் பட்டத்தினை வழங்கி அவரைச் சிறப்பிக்கும் நல்வாய்ப்பு கிடைத்ததை எண்ணி நான் உண்மையிலேயே பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஷேக் சின்ன மவுலானா, தமிழிசைக்குப் பல்லாண்டுகளாக ஆற்றிவரும் அரிய இசைத் தொண்டு போற்றுதற்கு உரியதாகும். நாதஸ்வரம் என்றாலே ஷேக் சின்ன மவுலானா என்ற பெயர் நினைவுக்கு வருகிற அளவுக்கு தமிழ்நாட்டின் பண்பாட்டின் அம்சமான நாதஸ்வர இசையின் புகழை உலகெங்கும் பரப்பி தமிழ் இசையின் தரத்தினை உலகே போற்றும் வண்ணம் நாத மழையை நாளெல்லாம் பொழிந்துவரும் ஷேக் சின்னமவுலானாவின் இசைத்தொண்டு மேலும் தொடர வேண்டும் என்ற எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஷேக் சின்னமவுலானா அவர்கள் தம்முடைய தலைமை உரையில் அரசு விழாக்களில் முதல் நிகழ்ச்சியாக நாதசுர இசை இடம் பெற வேண்டும் என்று தன் விருப்பத்தை இங்கு எடுத்து வைத்தார்.

அதைக் கருத்தில் கொண்டு இனி தமிழ் நாட்டில் நடை பெறும் அரசு விழாக்களில் முதல் நிகழ்ச்சியாக நாதசுர இசை இடம் பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



# மயிலையில் திருவள்ளுவர் விழா

மயிலை திருவள்ளுவர் ஆலயத்தில் 15-1-94 அன்று திருவள்ளுவர் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திருமிகு க. பா. பட்டாபிராமன் அவர்களும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமிகு ஆனந்தன் அவர்களும் கலந்துகொண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்குப் பரிசளித்துச் சிறப்பித்தனர். மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலய அறங்காவலர் திருமிகு கே.ஆர்.வி. ரமணி அவர்களும் கலந்துகொண்டார். அறங்காவலர் குழுத்தலைவர் திருமதி பரமேஸ்வரி ரத்தினவேலு மற்றும் அறங்காவலர்கள், ஆலய நிர்வாக அதிகாரி திருமிகு ஆர். எஸ். எஸ். கனிராஜ் அவர்களும் விழா நிகழ்ச்சிகளைச் சிறப்புற ஏற்பாடு செய்திருந்தனர்.



# அலங்கார நாயகன்

கம்பன் கவிநயமணி **வே. தியாகராஜன்**



கருணையே உருவமான கந்தர்பிரானின் அடிமுதல் முடிவரை உள்ள அழகுகள், அப்பெருமானது வாகனம், கொடி அவனது தெய்வீகப் பெயரைக் கூறுவதன் பெருமை, அவனது கருணை நிறைந்த அருள் வளம் முதலான வற்றை விவரமாகக் கூறும் அழகிய நூல் கந்தரலங்காரம். பல நீதிகளையும் வாழ்க்கையில் அவனை வணங்குவதால் ஏற்படும் பயன்களையும் கூறுவது இவ்வழகிய நூல். இதன் இறுதிப் பாடலில் இந்நூலைப் பாராயணம் செய்வோர் என்றும் நீடுழி வாழும் சகல செல்வயோகமிக்க சுக வாழ்வு பெறுவார் எனக் கூறுகிறார். சைவத் திருமுறையின் எட்டாவது திருமுறையான, மனத்தையுருக்கும் திருவாசகத்திற்கு இணையானது கந்தரலங்காரம் எனக் கூறுவர் முருகவேளின் அருளைப் பெற்ற தணிகைமணி உயர்திரு செங்கல்வராயபிள்ளையவர்கள்.

திருவாரூரில் பிறக்க முத்தி, காசியில் இறக்க முத்தி, சிதம்பரம் தரிசிக்கமுத்தி, ஆனால் அருணை என்னும் திருவண்ணாமலை நினைக்கமுத்தி. நினைத்தவுடன் முத்தியளிக்கும் திருவண்ணாமலையை வலிமையுடையது எனக் காட்ட அடல் அருணை எனக்குறித்தார். பிரம விட்டுணுக்களுக்குச் செந்நிறமுள்ள தீவடிவாய்க் காட்சியளித்தமையால் அருணை என்றார். புனிதமான திருவண்ணாமலையில் வல்லாளன் கோபுரத்தில் ஒருபுறம் விநாயகரும் மற்றொரு புறம் முருகனும் உள்ளனர். இந்த முதல் பாட்டில் ஆனைமுகன் ஆறுமுகன் இருவரையும் வணங்குகிறார். இருவரையும் யானைகளாக உருவகம் செய்கிறார்.

ஒரு யானையான விநாயகப் பெருமானை கண்டு தங்கள் தலையில் பக்தர்கள் தடபடவெனக் குட்டிக் கொள்ளுகின்றனர். உலக மக்களின் அறிவைக் கையில் இனிய பொருளாக வைத்துக் கொண்டுள்ளார். இச்சா சக்தி, கிரியாசக்தி; ஞானசக்திகளை மும்முதங்களாகப் பொழிவார். அப்பேர்ப்பட்ட விநாயகரைக் கண்டு, பக்கத்திலுள்ள முருகனையும் காண்கிறார். முருகப்பெருமான் இச்சாசக்தி-கிரியாசக்தியாகியவற்றை வள்ளி தேவானைகளாகவும் ஞானசக்தியை வேலாகவும் கொண்டுள்ளார். அறிவு (ஞானம்) எதையும் வெல்லும். வெல்லுவதே வேலாயிற்று. அறிவு கூர்மையாகவும் அகலமாகவும் ஆழமாகவும் இருக்க வேண்டும். முருகனது வேலும் கூர்மையாக அகலமாக ஆழமாக உள்ளது.

இத்தகைய முருகனையும் யானையாகக் குறிப்பிடுகிறார். முருகப்பெருமானின் தந்தை யானைத் தோலைத் தரித்தவர். பார்வதி அம்மையை (பிடி) பெண்யானையாகக் கூறினார் தேவாரத்தில். முருகப்பெருமானின் முதல் தேவி தெய்வானை. ஐராவதமென்ற யானையால் வளர்க்கப்பட்டவள். முருகப்பெருமானுக்கே ஒரு சந்தர்ப்பத்தில் யானை வாகனமாக வந்தது. யாவற்றுக்கும் மேலாக முருகப்பெருமானின் அண்ணனும் யானைமுகத்தவர். இப்படி யானை சம்பந்தமுள்ள முருகப்பெருமானை இளைய களிறு என்றார்.

உலகாயுதய வாழ்வில் கற்பு நிலையுண்டன்றோ! அதுபோல தெய்வீக நிலையிலும்

ஒரே தெய்வத்தை வணங்கும் நெறி உண்டு. கற்புடைய பெண் ஏனைய ஆடவரை வெறுக்க மாட்டாள்,இகழ மாட்டாள். அண்ணா, மாமா என்ற மாதிரி உறவு கொள்ளுவாள். அதுபோல் தெய்வீக உபாசனையுள்ளவர் ஏனைய தெய் வங்களை இகழமாட்டார். தன் தெய்வத் தையே மேன்மை செய்து வணங்குவார். கந்தரனுபூதியிலும் விநாயக வணக்கம் பாடும் போது நெஞ்சக்கன கல்லும் நெகிழ்ந்துருகத் தஞ்சத்தருள் ஷண்முகன்'' என முருகப்பெரு மானை ஏற்றமாகப் பாடினார்.எனவே முருகப் பெருமானை வணங்க வந்தவர் கந்தரலங் காரக் காப்புச் செய்யுளிலும் முருகப்பெரு மானையே பாடியருளினார்.

''அடலருணைத் திருக்கோபுரத்தே அந்த
வாயிலுக்கு
வடவருகிற்சென்று கண்டுகொண்டேன்;
வருவார்தலையில்
தடபடெனப்படுக்குட்டன் சர்க்கரை
மொக்கியகைக்
கடதட கும்பக்களிற்றுக்கு இளைய
களிற்றினையே.''

(நூல்)

## 1. துன்பச் சேற்றிலிருந்து தூக்கிய தூயோன்

மக்களில்லையே என்று மனிதன் துன்புறு கிறான். மனைவி கருப்பவதியானபின் அவள் மகனையோ மகளையோ ஈன்று உயிரோடு மீண்டும் கிடைப்பாளோ எனத்துன்புறுகிறான். மங்கையருக்குக் கருப்பவேதனைஎன்பதுமரண தண்டனை போன்று துன்பம் தரக் கூடிய தன்றோ? மக்கள் பிறந்த பின் அவரை நன்கு வளர்த்து ஆளாக்க வேண்டுமே என்ற கவலை. குழந்தைகளுக்கு நோய் வந்துவிட்டால் அதிக மாக கவலை. குழந்தைகள் பெரியவர்களான பின் நமக்கு அடங்கி நடக்காமல் மீறுகிறார் களே என்ற கவலை. திடீரெனக் குழந்தையை இழந்துவிட்டால் தாங்க முடியாத கவலை.அது மட்டுமா? பணத்தைச் சம்பாதிப்பது கவலை. மிகுந்த செல்வந்தர்கட்கு அரசாங்கம் எந்த வரி போட்டு எந்தக் காரணத்தால் பணத்தைப் பிடுங்கிக் கொள்ளுமோ என்ற கவலை.திருடன் வந்து விடுவானோ! தீப்பிடித்து விடுமோ! மக்கட்பேறில்லாமல் நம் செல்வம் பூராவும் நம் பங்காளிகள் எடுத்துக் கொண்டு விடுவார் களோ என்ற கவலை, எல்லாம்கவலை, துன்ப மயம். நம் உடல் நலம் சரியாக இருக்க வேண்டுமே என்ற கவலை. ஒரு வீட்டில் குடி யிருந்தோமென்றால் மாதா மாதம் வாடகை தருகிறோம். ஒரு மாதம் முடியவில்லையென் றால் அடுத்த மாதம் சேர்த்து வாங்கிக் கொள்ளுவார் வீட்டுக்காரர். இந்த உடலான வீட்டில் உயிர் குடியிருக்க ஒரு நாளுக்கு நான்கு வேளை ஆகாரமென்ற வாடகை கொடுக்க வேணும். ஒரு வேளை தாமதமானால் இந்த உடல் தன்னிடமுள்ள உயிரைத் துன்புறுத்தி வெளியேற்றப் பார்க்கும், யாரையோ நன்றி கெட்டவர் என்கிறோம். 'நேற்று இருந்தது உணவு கொடுத்தார்கள். இன்று இல்லையே கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுவோமே' என உடல் விட்டு வைப்பதில்லை. இத்தகைய நன்றியற்ற உடலைப் பெரியோர்கள் போற்ற மாட்டார்கள். உடல் சுகம் என்ற சேற்றில் மூழ்குபவர்கள் பன்றிகள்: சாக்கடையில் மூழ்கி 'ஆகா? என்ன சுகம்' என்பது போன்ற காரிய காரியம்.

இத்தகைய துன்பம் என்ற சேற்றில் மூழ்கித் துன்புறாது என்னைக் காப்பாற்றிய உன் கருணைதான் என்னே? என்று வியக்கின் றார். நான் தவமா செய்தேன்? எவ்வளவு பெரிய பேறு என மகிழ்ச்சியடைகின்றார்.

பெருமானே? உன் கருணைதான் இருந்த வாறு என்னே? உலகத்தையழிக்க வந்த கங்கை யைத் தம் தலையில் தாங்கிய கருணாமூர்த்தி சிவபெருமான் (ஆற்றை). தாருகாவனத்து முனி வர்கள் சிவபெருமான் மீது ஒரு அபிசாரயாகம் செய்து பாம்புகளை ஏவ அவற்றைத் தனது ஆபரணங்களாக அணிந்தார் (பணியை). கொன்றை மலர் தும்பமலரையும் பூண்ட தலை யில் கீற்றுப் பிறையைப் புனைந்தார் சிவ பெருமான். கீற்றுப் பிறையை (கீற்றை) அணிந் தது மிக அழகிய வரலாறு. சிவபெருமானின் எல்லையற்ற கருணையைக் காட்டும் வரலாறு. தக்கன் மக்களான 27 பெண்களை (இவைகள் தான் நட்த்திரங்கள்) சந்திரன் திருமணம் புரிந்து கொண்டான். அவர்களில் பேரழகியான ரோகிணி என்பவளின் அழகில் ஈடுபட்டு மற்ற மனைவியரை அலட்சியம் செய்தான். இதை யறிந்த தட்சன் யாவரிடமும் ஒரே மாதிரி அன்பு காட்டுமாறு கூற, சந்திரன் தட்சனை எதிர்த்துப் பேசினான். கோபம் கொண்ட தட்சன் 'இன்றிலிருந்து ஒவ்வொரு கலையாகக் குறைந்து அழியக் கடவாய்' எனச் சாபமிட் டான். 15 கலைகள் குறைந்த சந்திரன் கீற்றுப் பிறையான ஒரே கலையுருவில் சிவபெருமானை அடைக்கலம் புகுந்தான். தன்னையடைந்த சந்திரனை-கீற்றுப் பிறையை-தன் தலையில் அணிந்து கொண்ட சிவபெருமான் 'என்னை அடைந்தவர் வளர்ச்சி பெறுவார் என உலகம் அறியட்டும். நீ வளர்வாய். அடுத்த பதினைந்து நாட்கள் தட்சன் சாபத்திற் கேற்ப தேய்வாய் என்றார். அன்று முதல் தான் தேய்பிறை வளர்பிறை-அதாவது அமாவசை-பௌர்ணமி ஏற்பட்டது. இருபத் தேழு பெண்களின் வாழ்க்கையில் அவர்கள் கைம்மையடையாவண்ணம் காப்பாற்றிய கருணைதான் சிவபெருமான் தம் தலையில் கீற்றையணிந்தது. இதையே தாயுள்ளம் கொண்டவனே (பித்தா! பெற்றமனம்பித்து-பிள்ளைமனம்கல்லு என்ற வழக்கு)தலையிலே பிறை சூடினாய் (பிறைசூடி) பெரியோனே: (பெருமானே) கருணையுள்ளவனே (அருளாளர்) எனச் சுந்தரமூர்த்தி நாயனார் சிறப்பித்தார். இப்படியாவரையும் காப்பாற்றி அருள்மூர்த்தி யான சிவபெருமானுடைய குமாரனான நீர், என்னைக் காப்பாற்றிய கருணையை ஒரு தவமும் செய்யாத எளியவனைக் காத்த கருணையை என்ன வென்று சொல்லுவேன் என வியக்கிறார். முருகப்பெருமானைப் பாடி யதே பெரும் பேறன்றோ?



''பேற்றைத் தவம் சற்றும் இல்லாத என்னை
பிரபஞ்சம் என்னும்
சேற்றைக் கழிய வழிவிட்டவா'
செஞ்சடாடவிமேல்
ஆற்றைப்பணியை இதழியைத் தும்பையை
அம்புலியின்
கீற்றைப்புனைந்த பெருமான் குமாரன்
க்ருபாகரனே''

## 2. சீக்கிரம் கற்பீர் சிவகுமாரன் காதையை

ஆசையே துன்பத்திற்குக் காரணம், ஆசை பட்டது கிடைக்கவில்லை என்றால் துன்பம். ஆசையை விட்டு விட்டோமென்றால்ஆனந்தம். ஆசைப்படப்பட ஆய்வரும் துன்பங்கள். ஆசை விடவிட ஆனந்தமாமே என்பது திருமந்திரம். முனிவர் ஒருவர் தனது மரண காலத்தில் ஆண் பெண்களாக இரு மான்கள் வருவதைக் கண்டார். அவர் மானாகவே அடுத்த பிறவி எடுத்தார் என ஒரு வரலாறு உண்டு. எனவே ஆசை தான் பிறவிக்குக் காரணம். அத்தகைய ஆசையை ஒழித்துப் பிறவி எடுக்காதவண்ணம் காப்பது வேலாயுதப் பெருமானின் கருணை என்கின்றார். ஞானமே உருவான வேல் நம் பாவங்களை நீக்கி விடும் என்பதை ''வினையோட விடும் கதிர்வேல்'' என அனுபூதியில் கூறினார். அத்தகைய பெருமான் நம்மை பிறவி நீக்கம் பெறச் செய்பவன் என்பதை ''அழித்துப்பிறக்கவொட்டா அயில் வேலவன்'' என்கிறார். அத்தகைய பெருமானைத் தோத்திரம் செய்யக்கூடிய கவிதைகளை எழுத்துப் பிழையில்லாமல் கற்கவேண்டும்: என்றும் வாழ வேண்டும் என்ற நித்தியத்துவம் வேண்டுமென கேட்க வந்த கும்பகர்ணன் நித்ரத்துவம் வேண்டுமென வாய் தவறிக் கேட்டதால் வாழ்க்கைப் பூராவும் தூங்கிக் கொண்டேயிருந்தான் என்பது இராமாயண வரலாறு.

நம் உயிரை என்று கவர்ந்து கொண்டு போவானோ யமன். நம் இலக்கண இலக்கியங்கள் யமனிடமிருந்து நம்மைக் காப்பாற்றாது என்பர் ஸ்ரீ ஆதிசங்கராசாரியார். எனவே எழுத்துப் பிழையில்லாமல் இறைவனைப் பாடினால் யமவாதனையினின்று நீங்கலாம் என்பது குறிப்பு. பயங்கரக் கனைப்புச் சத்தத்துடன் வரும் எருமையின் மீது ஏறி வரும் யமனைக் கண்டால் கலங்கிப் போய் செயலிழந்து அறிவழிந்து போய் விடுவேன். உன்னை பாடவோ பரவித் தொழவோ முடியாது என்றார் திருப்புகழிலே இதே அருணகிரிநாதர். எனவே எழுத்துப் பிழையில்லாமல் இறைவன் திருநாமம் பாடி யமனை வெல்லுமாறு நமக்கு அறிவுறுத்துகின்றார்.

''அழித்துப் பிறக்கவொட்டா அயில்வேலவன்
கவியை அன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றிலீர்?
எரிமூண்டது என்ன
விழித்துப் புகையெழப் பொங்கும் வெங்கூற்றன்
விடும் கயிற்றால்
கழுத்தில் சுருக்கிட்டு இழுக்குமன்றோ கவி
கற்கின்றதே''.

## 3. நாலும் செய்யும் நல்லவனின் வேல்

தாராகாசுரன் என்பவனின் மக்களான வித்யுண்மாலி, தாராகாட்சன், கமலாட்சன் ஆகிய மூவரும் தவஞ்செய்து பிரமனிடம் மூவுலங்களையும் அடக்கித் துன்புறுத்தி தேவர்

களையும் அழித்துவிட முயன்றனர். அந்தரத்தில் சஞ்சரிக்கக்கூடிய இரும்பு, வெள்ளி பொன் இவற்றால் ஆகிய கோட்டைகளைக் கட்டிக் கொண்டனர். இவற்றையே முப்புரம் என்பர். தேவர்களின் துயரை நீக்கச் சிவபெருமான் சந்திர சூரியர்களைச் சக்கரங்களாகவும்' ஈரேழு பதினான்கு உலகங்களைத் தட்டுக்களாகவும் வேதங்கள் நான்கையும் குதிரைகளாகவும் கொண்ட தேரில், தேவர்கள் அனைவரையும் பரிவாரங்களாகவும் பிரமனைச் சாரதியாகவும், வாசுகியை வில்லின் நாண் கயிறாகவும், திருமாலையே அம்பாகவும் கொண்டு திரிபுரத்தையழிக்கப் புறப்பட்டான். இவ்வளவு தேவதைகளும் சிவபெருமான் தங்கள் உதவி கொண்டுதான் திரிபுரத்தை எரிக்கப் போகிறார் என எண்ணினர் போலும்? ஆயுதங்களையே பிரயோகம் செய்யாமல் சிரித்தே திரிபுரத்தை எரித்து விட்டார். ஆணவம் கன்மம் மாயைகளாகிய மும்மலைகளாகிய அரக்கரை அழித்தார். இவ்வரலாற்றை திருமூலர் தமது திருமந்திரத்தில்

'' அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்
முப்புரமாவது மும்மலகாரியம்
அப்புறம் எய்தமையாரறிவாரே. ''

எனக்கூறியருளினார். திரிபுரத்தைத் தன் சிரிப்பால் எரித்த சிவபெருமானுடைய மகனான முருகப்பெருமான் தனது ஞானவடிவான வேல்கொண்டு சூரனான ஆணவத்தையும், கிரௌஞ்ச மலையாகத் தோன்றிய மாயையும் அரக்கர்சேனைகளான கன்மத்தையும் அழித்து தேவருலகத்தைக்காத்தருளினார் என முருகப் பெருமானின் வேலாயுதத்தின் பெருமை கூறினார்.

''தேரணியிட்டு புரமெரித்தான் மகன்
செங்கையில்வேல்
கூரணியிட்டு அணுவாகிக் கிரௌஞ்சம்
குலைந்தது; அரக்கர்
சேரணிமுட்டு வளைந்து சகடம் நெளிந்தது:
சூர்ப்
பேரணிகெட்டது தேவேந்திரலோகம்
பிழைத்ததுவே. ''

**வெற்றிவேல் என்றுமே உற்ற துணை**

(தொடரும்)

## சோழர் காலத் திருக்கோயிலின் திருப்பணிக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் நிதி உதவி

பொது மக்களின் கோரிக்கையை ஏற்று திருவள்ளூர் அருகில் உள்ள பழமையான வள்ளீசுவரர் கோவிலுக்கு ரூ. 7 இலட்சம் செலவில் திருப்பணிசெய்ய மாண்புமிகு முதல்-அமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் தாலுகாவில் உள்ள வள்ளியனூரில் அமைந்துள்ள அருள்மிகு வள்ளீசுவரர் திருக்கோவில் சோழர் காலத்தினைச் சேர்ந்த மிகவும் பழமையான திருக்கோயில் ஆகும்.

கடந்த 24-12-1993 அன்று மாண்புமிகு முதல்-அமைச்சர் அவர்கள் சென்னை நகருக்கு குடிநீர் வழங்கும் செங்குன்றம் புழலேரி பூண்டி முதலான நீர்நிலைகளைப்பார்வையிட சென்றிருந்த போது, திருவள்ளூர் அருகே உள்ள வள்ளியனூர் கிராமத்தைச் சேர்ந்த பொது மக்கள் முதல்-அமைச்சரின் காரை நிறுத்தி தங்கள் ஊரில் அமைந்துள்ள கலைச் சிறப்புகள் மிக்க புராதன அருள்மிகு வள்ளீசுவரர் திருக்கோவில் பராமரிப்பின்றி, சிதைந்து நலிவுற்ற நிலையில் உள்ளதை எடுத்து உரைத்தார்கள். இந்தத் திருக்கோவிலைப் புதுப்பித்து தரவேண்டும் என்று பலஇடங்களில் கோரியும்இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் முறையிட்டார்கள்.

கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று சோழர் காலத்தில் கட்டப்பட்ட இந்த திருக்கோவில் புதுப்பித்து தரப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதியளித்தார்கள்.

மறுதினமே இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆணையாளரை அனுப்பி, இத்திருக்கோவிலைப் பார்வையிட்டு, பழுது பார்ப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதாக கூறினார்கள். முதல்-அமைச்சரின் ஆணைப்படி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆணையாளர் அவர்கள் மறுதினமே இந்தக் கோவிலைப் பார்வையிட்டு, கோவிலைப் புதுப்பித்துக் கட்ட மேற்கொள்ளப்பட வேண்டிய கட்டுமானப் பணிகள் குறித்து ஒரு நீண்ட அறிக்கையை மாண்புமிகு முதல்-அமைச்சருக்கு சமர்ப்பித்தார்.

அந்த அறிக்கையை ஆய்வு செய்து, வள்ளியனூர் அருள்மிகு வள்ளீசுவரர் திருக்கோவில், ராஜகோபுரம், சுவாமி சன்னிதியின் கர்ப்பகிரகம்,விமானம் மற்றும் அர்த்த மண்டபம், மகாமண்டபம்,அம்மன்,விநாயகர், சுப்பிரமணியர், சண்டிகேசுவரர் ஆகிய கடவுள்களின் சன்னதிகளைப் புதிதாக அமைத்தல் மற்றும் மதில்சுவர், வாயில் மற்றும் மின்இணைப்பு கொடுத்தல் போன்ற 14 திருப்பணிகளை 7 லட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ள மாண்புமிகு முதல்-அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

மொத்த செலவினமான 7லட்சம்ரூபாயில் தமிழக அரசு மானியமாக 2 லட்சம் ரூபாயும் முதல்-அமைச்சரின் திருக்கோவில் புணரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து 2 லட்சம் ரூபாயும் வழங்கவும் மாண்புமிகு முதல் - அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

— — —

# ஆடவல்லான்

கோயிற்கலைச் செல்வர் தி. இராசமாணிக்கம், பொள்ளாச்சி

சிவபெருமான் இலிங்கமாக மட்டுமன்றிப் பல்வேறு வடிவங்களில் வணங்கப்படுகிறான். அத்தகைய வடிவங்களில் சாதாரண மக்கள் மட்டுமன்றிக் கவிஞர்கள், கலைஞர்கள் கற்றோர் ஆகியோரின் பாராட்டைப் பெற்று உலகம் முழுமையும் புகழப் பெற்றது ஆடவல்லான் திருவுருவம். மதுகைடவர்கள் என்ற தானவர்களுடன் போரிட்டபோது கரிய மால் நாட்டியக் கரணங்களை உண்டாக்கியதாகச் சொல்லப்படுகிறது. மேலும் திருமாலின் பத்துத் தோற்றங்களில் (அவதாரங்களில்) ஒன்றான கண்ணனது காளிங்க நடனம் புகழ் பெற்றதே. இதைப் பெரியாழ்வார்.

'காளியன் பொய்கை கலங்கப் பாய்ந்திட்டு
அவன்
நீண்முடி யைந்திலும் நின்று நடஞ்செய்து
மீளவவனுக்கு அருள் செய்த வித்தகன்''

எனப் போற்றுகிறார். மங்கை மன்னன். 'குடமாடு கூத்தன்' என்றும், 'குறிய மாணியுருவாய கூத்தன்' என்றும் குறிப்பிட்டால், நம்மாழ்வார் 'மாயக்கூத்தர்' என்றும் 'குடக் கூத்த அம்மானே' என்றும் அழைக்கிறார். இருப்பினும், சிவபெருமான் தான் 'ஒப்பு இல் நடமாடவல்ல விகிர்த உருக்கொள் விமலன்' ஆகப் போற்றப்படுகிறான். சயனத்திருக்கோலம் திருமாலுக்கு உரியது என்றால், நடனத்திருக்கோலம் சிவபெருமானுக்கு உரியதாம். இவனது இலங்கு எரி எடுத்து ஆடும் வடிவம் இல்லாத சிவன் கோயில்கள் இல்லை.

இந்த அழகு ஒழுகும் வடிவில் தேவாரம் பாடிய மூவரும் ஒன்றிவிட்டதில் வியப்பு இல்லை.

'குழலின் ஓசை வீணை மொந்தை கொட்ட
முழவு அதிரக்
கழலின் ஓசை ஆர்க்க ஆடுங் கடவுள்'.

என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு. தில்லைச் சிற்றம்பலத்தில் ஆடுகின்ற அண்ணலின் ஆடல், திருவடி, உடுத்த துகில், உந்தியின் மேல் அசைத்த கச்சின் அழகு, கண்டத்து இலங்கும் ஏனத்து எயிறு, சிரித்த முகம், நெற்றியிற் கண், முத்தும் வயிரமும் மாணிக்கந் தன்னுள் விளங்கிய ஊமத்த மலர், நெருக்கி மிதித்த விரல் என ஒவ்வொன்றாகக் கூறி இவற்றைக் கண்ட கண் கொண்டு மற்று இனிக் காண்பது என்னே எனத் தமது வியப்பை அப்பர் பெருமான் வெளிப்படுத்துகிறார். இம்மட்டோ! திருஅருட் செல்வர்கள் எல்லோரும் மனித்தப் பிறவியை வேண்டாது இறைவனது திருவடி நிழலில் ஒன்றியிருப்பதைத்தான் வேண்டுவர். இருப்பினும் 'செந்தீ முழங்கத் திரு நட்டம் ஆடி' யின் வடிவில் தம்மை மறந்த அப்பர் பெருமான்.

'குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங்
காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த
மாநிலத்தே'

என்று மனித்தப் பிறவியை வேண்டுகின்றார் என்றால் 'சிற்றம்பலத்துப் பெருநட்டம் ஆடி' யின் பேரழகினை என்ன என்று இயம்புவது!

'பறையுங் குழலும் ஒலிபாடல் இயம்ப
அறையுங் கழல் ஆர்க்க நின்றாடும் அமுதே'

என்று அழைக்கிறார் சுந்தரர்.

மன்னர்களில் தலைசிறந்தவரை மாமன்னர் என வரலாற்று ஆசிரியர்கள்குறிப்பிடுவர். தமிழக வரலாற்றில் முதலாம் இராசராச சோழன் 'மாமன்னன்' எனப்படுகிறான். பத்தினிகளில் தலைசிறந்தவள் மட்டும் அல்லள், இறைத்தன்மையையும் உடையவள் என்பதைக் குறிக்கக் கண்ணகியைத் 'திருமாபத்தினி' எனச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் பல இடங்களில் பாராட்டியுள்ளார். இலக்கியங்களில் வேறு யாருக்கும் இந்த அடைமொழி கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. உலகின் எந்தப் பழைமையான நாகரிகத்திலும் ஆடவல்லான் வடிவம் போன்று மக்களைக் கவர்ந்த வடிவம் வேறு இல்லை என்பது ஆராய்ச்சியாளர் கருத்து. இத்தகைய ஈடு இணையற்ற ஆடலில் வல்லவனை மாநடம் ஆடுபவனாகப் போற்றுவதுசாலப்பொருத்தமே. 'மாநடமதாடி என்றும்,

'பேய்கள் பாடப் பல பூதங்கள் துதி செயப் பிணமிடு சுடுகாட்டில் வேய்கொள் தோளிதான் வெள்கிட மாநடம் ஆடும் வித்த கனார்' என்றும் சம்பந்தர் குறிப்பிட்டார்; 'குட முழவும் வீணைதாளங் குறுநடைய சிறுபூதம் முழக்கமாக் கூத்தாடுமே' என்று அப்பர் புகழ்ந்துரைக்கிறார். சுந்தரர் 'கானிடை மாநடன்' என்றும், 'படுபல் பிணக்காடு அரங்கா ஆடிய மாநடத்தான்' என்றும் பரவுகிறார்.

நடனம், ஆய கலைகள் அறுபத்து நான்கிலும் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. மண்ணில் உள்ள நவரத்தினங்களில் ஒளி வீசுகிறது. நீரில் அலை மோதுகிறது; நெருப்பில் அதன் நாக்கு நீட்டி நீட்டிக் காணப்படுகிறது; காற்று தென்றலாக வீசவோ புயலாக அடிக்கவோ செய்கிறது. ஆகாயத்தில் மின்னல் ஒரு மூலையினின்றும் மற்றொரு மூலைக்குத் துள்ளி விளையாடுகிறது. இவ்வாறு ஐம்பூதங்களிலும் நடனத்தைக் காணலாம். ஐம்பூதங்களிலும் காணப்படும் நடனத்தை இறையின் நடனமாகக் கொண்டனர். இதைத்தான் திருமூலர் தமது 'திருக்கூத்து தரிசனத்தில்'

'காளியோடு ஆடிக் கனகா சலத்து ஆடி
கூளியோடு ஆடிக் குவலயத்தே ஆடி
நீடியநீர் தீக்கால் நீள்வான் இடையாடி
நாளுற அம்பலத் தேயாடும் நாதனே'

என்று குறிப்பிட்டுள்ளார்.

இறைவனை ஏத்தி வணங்கும் முறைகள் பல.

'நிலைபெறுமாறு எண்ணுதியேல்நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகுஇட்டு மெழுக்கும் இட்டு
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம்ஆதீயென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே'

என்பது அப்பர் திருவாக்கு, கோயிலில் அலகிட்டு மெழுகிடல், இறைவனுக்குப் பூமாலை புனைதல், துதித்தல், கூத்தாடல் ஆகியவை இறைவனை வணங்கும் பல வழிகளாகக் குறிப்பிடப் பட்டுள்ளன. இன்னமும், பால் நெய் தயிர் ஆகிய ஆனஞ்சால் ஆட்டுதல், நொச்சியம் என்ற வில்வவகை, பச்சிலை, புனல் ஆகியவற்றால் அருச்சித்தல் என்ற முறைகளும் இறைவனை வணங்கக் கூறப்படுகின்றன. இவ்வாறு இறைவனை வணங்கும் பல வழிகளில் மிகச் சிறந்தது நடனம் எனச் சொல்லப்படுகிறது. இதனால்தான் இறைப்பணிக்குத் தம் வாழ்க்கையை ஒப்படைத்துவிட்ட மகளிருக்கு நடனக்கலை பயிற்றுவிக்கப்பட்டது போலும். அக்காலத்தில் ஒவ்வொரு கோயிலிலும் நடன மகளிர் இருந்தனர். இவர்கள் இறைவனுக்கு வழிபாடு நடைபெற்றபோதும், திருவிழாக் காலத்தும் இறைவனின் பல அருங்குண நலங்களை விளக்கும் வகையில் நடனம் ஆடி மக்கள் தம் மனம் இறைவனிடத்து ஒன்றுவதற்கு உறுதுணையாக இருந்து வந்தனர். இதை மாமன்னன் இராசராச சோழனது தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள கல்வெட்டினின்றும் தெரியலாம். இராசராசசோழன் தஞ்சாவூரில், தான் கட்டிய பெரிய கோயிலுக்காகத் தன் ஆட்சிக்கு உட்பட்டிருந்த 91 கோயில்களினின்றும் 400 தளிச்சேரிப் பெண்டுகளை, அஃதாவது நடன மகளிரைக் கொண்டு வந்து தஞ்சாவூரில் குடியமர்த்தினான்.



அழித்தற் கடவுளான சிவபெருமான் சுடலையில்ஆடுபவனாகக் கொள்ளப்பட்டான். 'சுடுகாடு அமர்ந்தபிரான்' என்றும், 'ஈமவனத்து எரிஆட்டு உகந்த எம்பெருமான்' என்றும் ஞானசம்பந்தப் பெருமான் குறிப்பிடுகிறார். 'சுடுகாடு நடமாடும் இடமாகக்கொண்டார்' என்பதோடு நில்லாது அப்பர் பெருமான்

'குலாவெண்த லைமாலை யென்புபூண்டு குளிர்
கொன்றைத்
தார்அணிந்து கொல்லேறு ஏறிக்
காலவெங் களிற்றுஉரிவைப் போர்வை மூடிக்
கையோடு அனல்ஏந்திக் காடு உறைவார்''

எனச் சுடுகாட்டில் உறையும் சிவபெருமான் கோலத்தை அழகாக எடுத்து உரைக்கிறார்.

'ஈமப் புறங்காட்டிற் பேயோடு ஆடல்புரிவான்'
'பறைக்கண் நெடும்பேய்க் கணம்பாடல்
செய்யக்
குறட்பா ரிடங்கள் பறைதாம் முழக்கப்
பிறைக்கொள் சடைதாழப் பெயர்த் துநட்டம்
பெருங்காடு அரங்கா நின்றாடல் புரிவான்'

எனச் சுந்தரர் சிவபெருமான் ஆடல் புரியும் பாங்கினைக் கூறுகிறார். 'பிணங்களடு காடத

னுள் நடமாடு பிஞ்ஞகன்' என்பது மங்கை மன்னன் திருவாக்கு. ஒரு நாடு அல்லது நகரம் அழிந்து விட்டால் அது சுடுகாடாக உள்ளது என்று சொல்வது உலக வழக்கில் உள்ளது. எனவே, அழித்தற்கடவுள் எல்லாவற்றையும் அழித்தபின் உள்ள சுடுகாட்டில் மாநடம் ஆடுவதாகக் கருதுவது அவனது இயல்பிற்கு ஏற்றதாகக் காணப்படுகிறது. இவன் உயிர்களின் பாசத்தளைகளை அறுக்கிறான்; மாயையை அழிக்கிறான்; 'தான்' என்னும் அகந்தையை அழிக்கிறான். இவன் நடமாடும் இடம் சுடுகாடு அன்று; பற்று, பாசம் ஆகியவை அழிக்கப்பட்ட அன்பர்களின் இதயம்தான் இவன் ஆடும் இடம் எனத் தத்துவப் பொருள் சொல்லப்படுகிறது.

படைத்தல், காத்தல், அழித்தல் மறைத்தல், அருளல் ஆகியவை இறைவனின் ஐம் பெருந்தொழில்கள் எனப்படுகின்றன. இதைத்தான் திருஞான சம்பந்தப் பெருமான் தமது முதற் பாடலில்,

'தோடுஉடைய செவியன் விடை ஏறிஓர்
தூவெண் மதிசூடிக்
காடுஉடைய சுடலைப் பொடிபூசிஎன் உள்ளங்
கவர்கள்வன்
ஏடுஉடைய மலரான் முனைநாள் பணிந்துஏத்த
அருள்செய்த
பீடுஉடைய பிர மாபுரம்மேவிய பெம்மான்
இவன்அன்றே''

எனக் குறிப்பிடுகிறார். இதில், 'தோடுஉடைய செவியன்' என்பது இவன் பெண், ஆண் ஆகிய பேரருளாளன் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. எனவே, இது படைத்தல் தொழிலைக் குறிக்கிறது. தக்கனது சாபத்தால் தனது 16 கலைகளில் ஒவ்வொன்றாகத் தேயப் பெற்ற சந்திரன் தன்னை அடைக்கலம் அடைந்த போது சிவபெருமான் 'அஞ்சற்க' என ஆறுதல் அளித்துத் தன் முடிமீதுஅணிந்து கொண்டான். அதன் மூலம் சந்திரனை அழிவினின்று மட்டும் காப்பாற்றவில்லை; மீண்டும் தான் முன்பு இருந்த நிலைக்கு உயர வழி வகுத்தான். இதனால் தான் ஞானசம்பந்தர் 'பிறைவளர் சடைமுடிப் பெருந்தகை' என அழைக்கிறார். இவ்வாறாக மதி சூடுதல் தன்னை நாடிய அன்பர்களைக் காப்பதை உணர்த்துவதால் இது சிவ பெருமான் காத்தல் தொழிலை மேற்கொண்ளதைத் தெளிவாகக் காட்டுகிறது. மயானத்து எரிந்தவற்றின் சாம்பலைச் சிவபெருமான் பூசுவது இவன் அழித்தல் தன்மை கொண்டவன் என்பதைக் குறிப்பிடுகிறது. அன்பர்களின் உள்ளங்களைக் கவருதல் இவன்மறைத்தல் தொழிலை உடையவன் என்பதையும், நான்முகன் தன்னைப் பணிந்து ஏத்த அவனுக்குச் சிவபெருமான் அருள்புரிந்தான் என்பது இவனது அருளல் தன்மையையும் எடுத்துக் காட்டுகின்றன.

ஆடவல்லானின் பின்வலக்கையில் உள்ள உடுக்கையை அடித்தால் ஒலி பிறக்கிறது. பெருவெளியில் உண்டான ஓங்கார ஒலியினின்றும் உலகம் தோன்றியதாகக் கருதப்படுகிறது. எனவே ஒலியை உண்டாக்கும் உடுக்கை படைத்தல் தொழிலைக் குறிப்பதாகக் கொள்ளப்படுகிறது. முன் வலக்கை அபய முத்திரையில் உள்ளது. தன்னைப் புகல் அடைந்தோருக்கு அபயம் அளிக்கிறேன் என்று கூறுமாறு போன்று உள்ளதால் அது காத்தற்றொழிலைச் சுட்டிக்காட்டுகிறது. பின் இடக்கையில் உள்ள தீ எல்லாவற்றையும் அழிக்கும் வல்லமை உடைமையால் அது அழித்தற்றொழிலைச் சிவ பெருமான் மேற்கொண்டு உள்ளான் என்பதைக் காட்டுவதாகக் கொள்ளப்படுகிறது. அவனது ஊன்றிய வலக்கால் மறைத்தல் தொழிலைக் காட்டுகிறது. இடக்கால் தூக்கி இருக்க முன் இடக்கை தண்ட முத்திரையால் தூக்கிய காலைச் சுட்டிக் காட்டுகிறது. அஃதாவது தனது காலில் அடைக்கலம் அடைந்தவர்கள் அருளப்படுவார்கள் என்று சொல்லுமாப்போன்று அஃது உள்ளதால், அஃது அருளல் தொழிலை எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு தான், ஐம்பெருந் தொழில்களைச் செய்பவன் என்பதை ஆடவல்லான் திருவுரு சுட்டிக்காட்டுகின்ற உண்மையினைக் குமரகுருபரர் தம் சிதம்பர மும்மணிக் கோவையில்,

'பூமலி கற்பகப் புத்தேள் வைப்பும்
நாமநீர் வைப்பின் நானில வளாகமும்
ஏனைப் புவனமும் எண்நீங்கு உயிரும்
தானே வகுத்ததுஉன் தமருகக் கரமே
தனித்தனி வகுத்த சராசரப் பகுதி
அனைத்தையுங் காப்பதுஉன் அமைந்தபொற்
கரமே
தோற்றுபு நின்றவத் தொல்லுலகு அடங்கலும்
மாற்றுவது ஆரழல் வைத்ததோர் கரமே
ஈட்டிய வினைப்பயன் எவற்றையு மறைத்து
நின்று
ஊட்டுவ தாகுநின் ஊன்றிய பதமே
அடுத்தஇன் உயிர்கட்கு அளவில்பே ரின்பம்
கொடுப்பது முதல்வநின் குஞ்சிதபதமே'

எனக் குறிப்பிட்டுள்ளார். இதைத்தான் மெய் கண்ட சாத்திரம் உண்மை விளக்கத்தில்,


'தோற்றந் துடியதனில் தோயும் திதி
அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்-ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தம்முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு'

எனக்கூறப்பட்டுள்ளது. திருமூலர் தமது திருக்கூத்து தரிசனத்தில்

'ஆனதொழில் அருளால் ஐந்தொழில் செய்தே
தேன்மொழிப் பாகன் திருநடம் ஆடுமே'

என்கிறார்.

சிவபெருமானது காளிகாதாண்டவம் படைத்தல்தொழிலையும், கௌரிதாண்டவம் காத்தற்றொழிலையும், சம்ஹார தாண்டவம் அழித்தற்றொழிலையும், திரிபுரதாண்டவம் மறைத்தல் தொழிலையும், ஊர்த்துவ தாண்ட



வம் அருளுதலையும், ஆனந்தத் தாண்டவம் ஐம்பெருந்தொழில்கள் அனைத்தையும் குறிப்பதாகப் பொருள் கொள்வர். இவ்வாறாக இறைவனின் ஐம்பெருந்தொழில்களையும் ஒருங்கே காட்டும் ஆடவல்லான் திருவுரு சிவபெருமான் தான் முத்தொழில் புரியும் மூவரில் ஆதியும் அந்தமும் அற்ற முழுமுதற் பொருள் என்பதை வலியுறுத்துகிறது.

'ஓங்காரமே நற்றிருவாசி உற்று அதனில்
நீங்கா எழுத்தே நிறை சுடராம்'

என உண்மை விளக்கத்தில் கூறப்பட்டுள்ளது. அஃதாவது ஆடவல்லான் திருவுருவைச் சுற்றியுள்ள திருவாசி ஓங்காரமாகிய பிரணவ மந்திரம், பிரணவத்தை விட்டு நீங்காத நமச்சிவாய என்னும் பஞ்சாட்சர மந்திரம் திருவாசியின் உள்ளே நிறைந்த உள்ளொளியாக உள்ளது என்பதாம். அஃதாவது நமச்சிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரமும் ஆடவல்லான் திருவுருவும் ஒன்றே வேறன்று என்பதை உண்மை விளக்கம் வலியுறுத்துகிறது.

'ஆடும் படிகேள்நல் அம்பலத்துள் ஐயனே
நாடுந் திருவடி யிலேநகரங்-கூடு
மகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரு முகம்முடியப் பார்'

என்பது உண்மை விளக்கம். அஃதாவது சிவபெருமான் திருவடி நகரமாகவும், வயிறு மகரமாகவும், திருத்தோள் சிகரமாகவும், திருமுகம் வகரமாகவும், திருமுடி யகரமாகவும் கொண்டு திருநடம் செய்கிறானாம்.

'சேர்க்குந் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்-பார்க்கிலிறைக்கு
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்'

என்று உண்மை விளக்கத்தில் மேலும் கூறப்பட்டுள்ளது. அஃதாவது உடுக்கை ஏந்திய கை சிகரமாகவும், நன்றாக வீசும் கை வகரமாகவும், அபயமுத்திரையில் உள்ள கை யகரமாகவும், தீ ஏந்திய கை நகரமாகவும், முயலகன்மீது வைத்துள்ள கால் மகரமாகவும் கொண்டு சிவபெருமான் திருநடம் புரிகின்றானாம். இவ்வாறாகச் சிவபெருமான் திருவுருகுறிப்பாக ஆடவல்லான் திருவுரு, ஐந்தெழுத்து மந்திரமாக உள்ளது என்பதை உண்மை விளக்கம் அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறது.

ஆடவல்லான் திருவுருவில் அபயமுத்திரையில் உள்ள கைஇறையின் அருளும் தன்மையையும், தீ ஏந்திய கை இறைவனது அழிக்கும் தன்மையையும் காட்டுகின்றன. இவ்வாறாக ஆடவல்லான் திருவுருவில் அருளும் தன்மை மற்றும் அழிக்கும் தன்மை ஆகிய ஒன்றுக்கொன்று மாறுபட்ட தன்மைகள் ஒரு சேர அமையப் பெற்றுள்ளன. இதற்கு ஒப்பதும் மிக்கதும் ஆன இறைவடிவு வேறு ஏதும் இல்லை. இந்துக்களின் எண்ணம் கலை, இலக்கியம், கலாசாரம் ஆகிய எல்லாவற்றையும் ஆடவல்லான் திருவுரு கவர்ந்து அவற்றில் என்றும் அழியா உயர்ந்த இடத்தைப் பெற்றுள்ளது.

சிவபெருமான் ஆணோடு பெண்ணாகிய பெம்மான் அன்றோ! எனவே அவனது வலப்பாகமான ஆண் பகுதி தாண்டவ நடனத்தை ஆட, இடப்பாகமான பெண் பகுதி வசிய நடனத்தை ஆடுமாம். இவ்வாறாகத் தாண்டவம் மற்றும் வசியம் என்ற இரு வேறு வகையான நடனங்களையும் சிவபெருமான் ஒருவனால்தான் ஆட இயலும், சிவபெருமானது பெண் பகுதி வசிய நடனத்தை மிக நன்றாக ஆடும் காரணத்தால் அவன் சர்வசாதகன் எனப்படுகிறான். சிவபெருமானது உடுக்கை ஒலியினின்றும் பாணினிக்காக இலக்கணம் பிறந்ததாம். சனக சனாதன முனிவர்களுக்காக உடுக்கை ஒலி உலகப்பற்றை ஒழித்து மறுமை இன்பம் பெற வழிகோலியதாம். இவ்வாறு சிவபெருமான் இம்மை, மறுமை ஆகிய இரண்டிலும் அருஞ்செயல்கள் புரிந்ததாகச் சொல்லப்படுகின்றது.

சிவபெருமானது நடன வடிவம், அவன் வல்லமை யாவையும் பெற்றவன்; எங்கும் நீக்கமற நிறைந்துள்ளவன்; அவன் அன்றி அணுவும் அசையாது என்ற உண்மைகளுக்கு ஏற்ப எல்லாவற்றையும் அறிந்தவன்; காலத்தைக் கடந்தவன் அஃதாவது ஆதியும் அந்தமும் அற்றவன் என்பனவற்றைக் குறிப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இத்தகைய ஆடவல்லான் அழகுருவைத் தியானித்து இம்மை, மறுமைப் பயன்பெற்று உய்வடைவோமாக.

# தேவார மூவர் இசைத் தொண்டு

டாக்டர் த. அமிர்தலிங்கம்

R. RAJU,
Dy Commissioner H.Qrs
(Retired)
HR&CE Administration Dept

முன்னுரை :

''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்று இறைவனைப் போற்றுகிறார் அப்பர் சுவாமிகள். 'ஏழிசையாய், இசைப்பயனாய்' என்று பாடுகிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள். இசையாகவும் இசையின் பயனாகவும் இறைவனே விளங்குகின்றான் என்பதை வேதமும் சொல்கிறது. தமிழ் வேதமாக விளங்கும் தேவாரமும் அவ்வாறே கூறுகிறது என்பதைத்தான் அப்பர் சுவாமிகள் சுந்தர மூர்த்தி சுவாமிகள் வாக்கிலிருந்து அறிந்து கொள்கிறோம்.

ஓசையிலிருந்துதான் இறைவன் சகல லோகங்களையும் படைக்கிறான். சிவபெருமான் தம் ஒரு திருக்கரத்தில் கொண்டு விளங்கும் உடுக்கையின் ஓசையால்ஈரேழு பதினான்கு உலகங்களையும் சகல ஜீவராசிகளையும் படைக்கின்றார். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் இவை ஈசனின் பஞ்ச கிருத்தியங்கள். இதில் படைத்தல் எனும் முதல் கிருத்தியமே உடுக்கையிலிருந்து எழும் இசையால் தான் நிகழ்கிறது என்பதைத் 'தோற்றம் துடியதனில்' எனும் உண்மை விளக்கப் பாடலால் அறிகிறோம்.

கலைகளுக்குத் தெய்வமான சரஸ்வதி கையில் வீணை வைத்திருப்பது நம் எல்லோருக்கும் தெரியும். பரமேசுவரரின் பத்தினியான பராசக்தியும் கையிலே வீணை வைத்திருக்கிறாள்.

'ஸரிகமபதநி ரதாம் தாம்
வீணா ஸங்கிராந்த சாந்த ஹஸ்தாந்தம்'

நவரத்தின மாலா தோத்திரத்தில் காளிதாஸர் இப்படிக் கூறுகிறார். அம்பாள் விரல் நுனியால் வீணையை மீட்டிக் கொண்டிருக்கிறாள். ஸரிகமபதநி என்ற ஸப்த ஸ்வரங்களின் இசையில் திளைத்து ஆனந்திருக்கிறாள் என்பது இதன் பொருள்.

சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்தியமம் பஞ்சமம், தைவதம், நிஷாதம் இவை சப்த சுரங்களாகும். இப்பெயர்களின் முதல் எழுத்துக்களைச் சேர்த்துத்தான் சரிகமபதநி என்று வழங்குகிறோம்.

அம்பாள் சாந்தமயமாக இருப்பதற்குக் காரணமே இசைதான். அவள் மென்மையான அருள் உள்ளம் கொண்டு அடியார்களுக்குத் திருவருள் செய்ய காரணமாக இருப்பதும் இசைதான்.


'சாந்தாம் மருதுள ஸ்வாதாந்தாம்
குசபரதாந்தாம் நமாமி சிவகாந்தாம்'

அம்பிகை சங்கீதத்தில் அமிழ்ந்திருப்பதனால்தான் சாந்த ஸ்வரூபிணியாகவும், ஸங்கீத அனுபவத்தினால்தான் அவளுடைய உள்ளம் புஷ்பத்தைப் போல மிருதுவாகவும் மென்மையாகவும் கருணை மயமாகவும் ஆகியிருக்கிறது என்று தொனிக்கும் வகையில் காளிதாசர் பாடியிருக்கக் காண்கிறோம்.

அம்பாளைப் போலவே ஈசுவரனும் கூட வீணை வாசிக்கும் திருக்கோலம் கொண்டிருக்கிறார். தும்புரு, நாரதர், சுகர் ஆகியோர் இசைஞானம் போதிக்க வேண்டும் என்று வேண்ட, வீணை தாங்கி வாசித்துக் காட்டி அரிய இசை நுணுக்கங்களை அம்முனிவர்களுக்குப் போதித்திருக்கிறார். வீணா தட்சிணாமூர்த்தி என்ற திருநாமம் அப்போது அவருக்கு உண்டானது. ஈசன் வீணை வாசித்து நவகோள்களின் கொடுமைகளை நீக்குகிறான் என்று திருஞான சம்பந்த சுவாமிகளும் 'கோளறு பதிகத்தில்' பாடியிருக்கக் காண்கிறோம்,

'வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமேபுகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லதல்ல
அடியார் அவர்க்கு மிகவே''—

திருஞான சம்பந்தர் அருளியிருக்கும் இப்பாடல் கோளறு பதிகத்தின் முதல் பாடல். சிவபெருமான் வீணை வாசித்து கோள்கள் தீமை செய்யாத வண்ணம் தடுத்தாட்கொள்கிறார் என்பதை 'திராவிட சிசு' என்று ஆதி சங்கரரால் போற்றப்படும் திருஞானசம்பந்தர் இப்பதிகத்தில் கூறியிருக்கக் காண்கிறோம். எங்கும் நீர்மயமாகி ஊழிப் பெருவெள்ளத்தில்




உலகம் ஒடுங்கி விட்ட பிறகு, மீண்டும் உலகத்தை வீணை வாசித்தே உண்டாக்குவார் சிவபெருமான். இதனை அப்பர் சுவாமிகள்

'பெருங்கடல் மூடிப் பிரளயம் கொண்டு
பிரமனும்போய்
இருங்கடல் மூடி யிறக்கும் இறந்தான்
களேபரமும்
கருங்கடல் வண்ணன் களேபரமுங் கொண்டு
கங்காளராய்
வருங்கடல் மீளநின்றெம் இறைநல்வீணை
வாசிக்குமே'

என்று பாடக் காண்கிறோம்.

அசுவதரன், கம்பளதரன் என்று இரு கந்தர்வர்கள் சிவபெருமானை வேண்டித் தவம் செய்து சிவபெருமானின் குண்டலமானார்கள். சிவபெருமானின் செவிகளில் குண்டலமாக இருந்து கொண்டு, இடைவிடாமல் இசைபாடி ஈசனை மகிழ்விக்கிறார்கள் அவ்விருவரும் என்றும் புராணங்கள் கூறுகின்றன.

ஏழிசையாக, இசைவடிவாக, இசைப் பயனாக விளங்கும் இறைவன் இனிய இசைக்கு உருகி விடுகிறான். 'வேத அத்தியயனம், யோகம், தியானம், பூஜை முதலானவற்றைக் கஷ்டப்பட்டு அப்பியசிப்பதால் கிடைக்கிற ஈசுவரானுபவத்தைத் தெய்வீகமான சங்கீதத்தின் மூலம், நல்ல ராக தாள ஞானத்தின் மூலம் சுலபமாகவும் சௌக்கியமாகவும் பெற்றுவிடலாம்'' என்கிறார்கள் ஆன்றோர்கள். சிவபெருமானின் நெற்றிக் கண்ணின் நெருப்பும்கூட, இனிய இசையால் குளிர்நீது போகுமாம். 'நெற்றி தனிக் கண் நெருப்பைக் குளிர்விக்கும் கொற்றைத் தனியாழ் குல முனிவன்' என்று நாரதரின் வீணை இசைச் சிறப்பு போற்றப்படுகிறது நளவெண்பாவிலே.

ஆயகலைகள் அறுபத்து நான்கிலும் தலையானதுஎன்று பெருமையுடையது இசைக்கலை. தெய்வீகமானது இசைக்கலை. கடவுளிடம் மனிதரையும், மனிதனிடம் கடவுளையும் இசைய வைப்பது இசை. நாடு மொழி மதம் நிறம் முதலான பேதங்களையெல்லாம் போக்கி அனைவரிடமும் ஒருமைப்பாட்டு உணர்வை ஏற்படச் செய்வது இசையேயாகும்.

இசைக்கு நல்லார் பொல்லார், கற்றார் கல்லார், சிறியார் பெரியார், இல்லறத்தார் துறவறத்தார், ஆண்டான் அடிமை என்ற பேதமொன்றும் இல்லை. எல்லோரும் இனிய இசைக்கு மயங்குவர். மதயானையும் யாழிசைக்கு மயங்கும். ஆடு, மாடுகளும் குழலிசைக்கு மயங்கும். நச்சரவும் மகுடிக்கு மயங்கும்.

இறைவனுக்குகந்த நிவேதனப் பொருள் இசைதான். இசையின் மூலம்தான் நாம் இறைவனிடம் பக்தி கொள்ள முடியும். இவ்வுண்மை உலகம் முழுமைக்கும் ஒத்ததாகும். ஒரொரு தொண்டிற்கு ஒரோரு குறிப்பிட்ட பயனைத் தரும் இறைவன் இசைத் தொண்டு புரிவாருக்கு அளவே இல்லாமல் பயன் தருவான் என்று போற்றுகிறார் அப்பர் பெருமான்.

'விளக்கினால் பெற்ற இன்பம்
மெழுக்கினால் பதிற்றி யாகும்
துளக்கினன் மலர்த் தொடுத்தால்
தூயவிண் ஏறலாகும்
விளக்கிட்டார் பேறு சொல்லின்
மெய்ந்நெறி ஞானமாகும்
அளப்பில கீதம் சொன்னார்க்கு
அடிகள் தாம் அருளுமாறே'

இசைத் தொண்டு புரிந்தவர்க்கு என்ன பயன் கிடைக்கும் என்பதை என்னால் அள



விட்டுக் கூற முடியாது என்றே அப்பர் சுவாமிகள் இப்பாடலில் கூறியிருக்கக் காண்கிறோம்.

ஆணவம் மிகுந்த அரக்கன் இராவணனுக்கு அன்று சிவபெருமான் அருள் செய்யக் காரணமாய் இருந்தது அவன் பாடிய இசை. எளிய பாணபத்திரன் பொருட்டு வேதங்கள் காண முடியாத திருமுடியில் இறைவன் விறகு சுமக்க காரணமாக இருந்தது பாணபத்திரரின் இசைத் தொண்டே. திருஞானசம்பந்தர் நாளும் இன்னிசையால் பக்தியினை வளர்த்த பாங்கினை நாம் அறிவோம்.

அவர் மேக ராகக் குறிஞ்சிப் பண்ணில் பாடி யருளிய தேவாரத் திருபாடல்களைப் பாடினால் வறண்ட கோடை காலத்திலும்கூட மழை பொழிவதை இன்றும் கண்கூடாகக் காணலாம்.

அன்னை பராசக்தியிடம் ஞானப்பால் உண்டு தேவாரம் பாடத் தொடங்கிய திருஞானசம்பந்தரின் வடிவமே இசைவடிவம் என்கிறார் சேக்கிழார்.

''ஞானத்தின் திருவுருவை நான்மறையின்
தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர்
மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றை செஞ்சடையார்
சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக்
கண்டார்கள்''

என்பது பெரிய புராணம். திருஞான சம்பந்தர் சமணருடன் நிகழ்த்திய புனல் வாதம், அனல் வாதம் புகழ் பெற்றவை.

திருநீறு பூசுவதையே குற்றம் என்று கூறிய பாண்டியனைத் திருநீற்றால் குணப்படுத்தி திருநீறு பூசச் செய்து சைவ சமயத்தைத் திருஞான சம்பந்தர் மீண்டும் தமிழகத்தில் தழைக்கச் செய்தார் என்றால் அதற்குக் காரணம் அவருடைய தமிழிசைத் தொண்டு, திருஞான சம்பந்தருக்கு இறைவனே திருக்கோலக் காவில் பொற்றாளம் வழங்குகிறார். அவருடைய தேவாரப் பாடல்களுக்கு உடனிருந்து இசை மீட்ட திருநீலகண்ட யாழ்ப்பாணரை அனுப்பி வைக்கிறார். நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தர் நிகழ்த்திய பக்தி இயக்கத்தால்தான்- தமிழ் இயக்கத்தால் தான் சைவ சமயம் தமிழகத்தில் உயிர் பெற்று தழைத்தது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

''தென்னவன் தனக்கு நீறு சிரபுரச் செல்வர்
ஈந்தார்
முன்னவன் பணிந்து கொண்டு முழுவதும்
அணிந்து கொண்டான்
மன்னன் நீறு அணிந்தான் என்று மற்றவன்
மதுரை வாழ்வார்
துன்னிநின்றார்கள் எல்லாம் தூயநீறு அணிந்து
கொண்டார்''

'பூதிமெய்க்கணிந்து வேந்தன் புனிதனாய்
உய்ந்தபோது
நீதியும் வேத நீதியாகியே நிகழ்ந்த தெங்கும்
மேதினி புனிதமாக வெண்ணீற்றின் விரிந்த
ஜோதி
மாதிரம் தூய்மை செய்ய அமணிருள்
மாய்ந்ததன்றே''

என்று சேக்கிழார் பெருமான் அமணிருள் மாய்க்க அவதாரம் செய்த திருஞான சம்பந்தர் தமிழிசை இயக்கத்தால், அமணிருள் மாய்த்து வெண்ணீற்றின் விரிந்த சோதியைத் தழைக்கச் செய்த வரலாற்றைத்தான் மிகமிக விரிவாகப் பாடுகிறார். 4253 செய்யுட்களால் ஆன பெரிய புராணத்தில் 1258 பாடல்கள் தமிழ் இசை இயக்கத்தால் சைவம் தழைக்கச் செய்த திருஞான சம்பந்தர் வரலாறு கூறுவது. ஆகவே தான் பெரிய புராணத்தையே 'பிள்ளைபாதி புராணம் பாதி' என்று சிறப்பிக்கிறார்கள் ஆன்றோர்கள்.

இவ்வாறு தமிழ் ஞானசம்பந்தர் என்றே தம்மை அழைத்துக் கொண்ட திருஞான சம்பந்தரின் வெற்றிக்கெல்லாம் அவர்தம் இசைத் தொண்டே காரணம் என்று போற்றுகிறார் சுந்தரமூர்த்தி நாயனார்.

'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும்
ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்து அவன் பாடலுக்கிரங்கும்
தன்மையாளன்'

என்கிறார் சுந்தரமூர்த்தி நாயனார். ஆகவே திருஞானசம்பந்தரின் வெற்றி தமிழிசையின் வெற்றி.

மகேந்திரவர்ம பல்லவனைச் சைவன் ஆக்கித் திருநாவுக்கரசர் வெற்றி கொண்டார் என்றால் அதுவும் தமிழ் இசையின் வெற்றி தான்.

'சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசைப்பாடல் மறந்தறியேன்'

என்று இசைப்பாடலை மறந்தறியேன் என்று உறுதி கூறிய பிறகுதான் இறைவனார் அவர் தம் சூலை நோயை போக்கிப் பல அற்புதங்கள் ஆற்றவும் அருள் புரிந்தார் என்பதைக் காண்கிறோம்.

சுந்தர மூர்த்தி நாயனாரை வயோதிக அந்தணர் கோலத்தில் வந்து வழக்காடித் தடுத்தாட்கொண்டபோது இறைவனார் தமக்கு விருப்பமான அர்ச்சனை அடியவர் பாடும் இசைப்பாட்டே என்று அறிவிக்கவும் காண்கிறோம்.

'மற்றுநீ வன்மை பேசி வன்தொண்டன் எனும்
நாமம்
பெற்றனை நமக்கும் அன்பின் பெருகிய
சிறப்பின் மிக்க
அர்ச்சனை பாட்டே யாகும் ஆதலால்மண்மேல்
நம்மைச்
சொற்றமிழ் பாடுகென்றார் தூமறை பாடும்
வாயார்'

இவ்வாறு சிவபெருமான் தமக்கு விருப்பமான அர்ச்சனை பாட்டு என்று அறிவுறுத்த சுந்தரர் பாடியமையால் தானே அவருடைய பாடல்கள் எல்லாம் திருப்பாட்டு என்றே வழங்கிடக் காண்கிறோம்.

அங்கும் இங்குமாகச் சிதறிக் கிடந்த இந்தத் தேவாரப் பாடல்களை முழுமையாக நமக்குத் தொகுத்தருளியவர் நம்பியாண்டார் நம்பிகள், திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையார் (சுயம்பு மூர்த்தியாதலால் இப் பெயர்) பக்தரான நம்பியாண்டார் நம்பிகளை நாடித் தேவாரப் பாடல்களைத் தொகுத்துத் தர வேண்டினார் இராஜ இராஜசோழ மன்னன். தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய இராஜராஜ சோழன்தான் இவர். பொள்ளாப் பிள்ளையார் திருவருளால் தேவாரப் பாடல்கள் தில்லையம்பலத்தின் கண் ஓரறையில் வைத்துப் பூட்டப்பட்டிருப்பதை அறிந்து, தில்லை மூவாயிரவரை அணுகித் திருக்கதவம் திறந்தருளுமாறு வேண்டினர் நம்பியாண்டார் நம்பிகளும் இராஜராஜசோழனும். 'தேவாரம் பாடிய மூவரும் வந்தால்தான் திருக்கதவம் தாள் திறப்போம்' என்று மறையவர் கூற, நம்பியாண்டார் நம்பியின் ஆலோசனையின் பேரில் இராஜராஜசோழன் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர்தம் திருவுருவச் சிலைகளை எழுந்தருளச் செய்தார். மூவர் வந்த பிறகு திருக்கதவம் தாள் திறந்து விட்டனர் தில்லை மறையவர்கள். அவ்வறையில் இருந்த ஏடுகள் பல கரையானால் அரிக்கப் பட்டு காணப்பட இருவரும் வருந்த 'தேவையான திருமுறைகளை வைத்து மற்றவற்றைத் தான் செல்லரிக்கச் செய்தோம்' என முழங்கியது அசரீரி.

பின்னர் நம்பியாண்டார் நம்பிகள் திருமுறை ஏடுகளை நன்கு ஆய்ந்து திருஞான சம்பந்தர் அருளி நமக்கு கிடைத்த 385 திருப்பதிகங்களை முதல் மூன்று திருமுறைகளாகவும் திருநாவுக்கரசர் அருள நமக்குக் கிடைத்த 315 திருப்பதிகங்களை 4, 5, 6 திருமுறைகளாகவும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருள நமக்குக் கிடைத்த 100 திருப்பதிகங்களை ஏழாம் திருமுறையாகவும் வகுத்தருளினார். இராஜராஜ சோழனும் 'திருமுறை கண்ட சோழன்' எனும் பெயர் பெற்றான். இதே கால கட்டத்தில் தான் நாதமுனி என்னும் வைணவப் பெரியார் பெருமுயற்சி செய்து ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களை நாலாயிரத் திவ்வியபிரபந்தமாகத் தொகுத்தருளினார்கள்.

தேவாரம் பாடிய மூவரோடு திருவாசகம் பாடிய மணிவாசகரையும் சேர்த்து சைவ சமயக் குரவர் நால்வர் என்று உலகம் போற்றுகின்றது. 'நாலுபேர் சென்ற வழியில் நாமும் செல்ல வேண்டும்' என்று நாட்டில் ஒரு பழமொழி வழங்குகிறது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சென்ற பக்தி வழியில் நாமும் செல்லவேண்டும் என்பதுதான் இதன்பொருள்.

'சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும்எம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும்—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத் தெங்கே'

என்று ஆன்றோர் ஒருவர் பாடியிருப்பதற் கிணங்க தேவாரம் பாடிய மூவரும், மாணிக்க வாசகரும் நம்மிடையே தோன்றாமல் போயிருந்தால் சைவ சமயம் இன்றுள்ள சிறப்போடு இருந்திருக்க இயலாது என்பது உண்மையான கருத்தேயாகும்.

தேவாரத்திலுள்ள ஒவ்வொரு பாடலும் ஒரு மந்திரம் ஆகும். பக்தியுடன் தேவாரப் பாக்களை நாளும் 'காதலாகிக் கசிந்துருகிக் கண்ணீர் மல்கி ஓதுவோம்' ஆகில் தீவினைகள் நீங்கும். வாழ்வின் நலங்கள் ஓங்கும். கிடைத்தற்கரிய இறைவனுடைய திருவடிப்பேறு எளிதில் கிட்டும்.

தேவாரப் பாடல்கள் என்னென்ன அற்புதங்கள் புரிந்திருக்கின்றன என்பதையெல்லாம் நமக்குச் சான்றோர்கள் தொகுத்துப்பாடி அருள் செய்திருக்கிறார்கள்.

'புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார் தலைதத்தெனத் தத்துமே
கனவில் ஏடிடப் பச்சென்றி ருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்பு பொற்பாவைய தாக்குமே
சினவரா வெவ்விடம் தீர்கெனத் தீர்க்குமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே''

இது திருஞான சம்பந்தர் அருளியிருக்கும் தேவாரப் பாடலின் சிறப்பை எடுத்துரைக்கும் அற்புதப் பாடலாகும். இதைப் போலவே திருநாவுக்கரசர் சுந்தரர் அருளியிருக்கும் தேவாரப் பாடல்களின் சிறப்பை எடுத்துரைக்கும் அற்புதப் பாடல்களும் உள்ளன.

அமெரிக்க நாட்டில் ஒரு பிரபல டாக்டர் தம் மருத்துவ மனையின் பிரதான முகப்பில் 'இசையை நாடுங்கள்: இசையை நாடினால் என் மருத்துவமனைக்கு வர வேண்டிய தேவையே இருக்காது' என்று எழுதி வைத்திருக்கிறார். சாதாரண இசைக்கே நோய் தீர்க்கும் ஆற்றல் இருக்குமானால், தேவார இசைக்கு எத்தகைய மகத்தான ஆற்றல் இருக்கும் என்பதைப் பாருங்கள்.

'கூர்வாள் அரக்கன்தன் வலியைக் குறைவித்துச்
சீராலே மல்கு சிற்றம்பலம் மேய
நீரார் சடையானை நித்தல் ஏத்துவார்
தீரா நோயெல்லாம் தீர்தல் திண்ணமே'

என்று பாடுகிறார் திருஞான சம்பந்தர். அவரே கொல்லிமழவன் மகள் கொண்ட முயலகன் நோயை 'துணிவளர் திங்கள்' எனத் தொடங்கும் பதிகம் பாடிக் குணப்படுத்தியிருக்கக் காண்கிறோம். 'திருநீற்றுப் பதிகம்' பாடி பாண்டியன் நெடுமாறன் வெப்புநோயைக் குணப்படுத்தியிருக்கிறார். நோய் தீர்ப்பதற்கு மட்டும் அல்ல, பொருள் பெருக, சுகப்பிரசவம் ஆக, நவகிரகதோஷம் நீங்க, இழந்த கண் பார்வை பெற பகைமை விரோதம் நீங்க, வழக்கில் வெற்றி பெற, மனநிம்மதி சாந்தி பெற, களவு போன பொருள் மீளக் கிடைக்க இப்படி எத்தனையோ பலன்களுக்கான அற்புதப் பதிகங்கள் தேவாரத் திருமுறைகளில் இடம் பெற்று விளங்கக் காண்கிறோம்.

எங்கே தேவாரத் திருமுறை இசைக்கப் படுகிறதோ அங்கே இறைவன் எழுந்தருளி அருள் பாலிக்கிறான் என்பதை தேவார திருமுறை பாடிய அருளாளர்களே நமக்குத் தெளிவுபடுத்தியிருக்கக் காண்கிறோம்.

''மனத்தகத்தான் தலைமேலான் வாக்கின் உள்ளான்
வாயாரத் தன்னடியே பாடும் தொண்டர்
இனத்தகத்தான்''

என்கிறார் திருநாவுக்கரசு சுவாமிகள்.

'பண்ணும் பதம் ஏழும்
பல்லோசைத் தமிழவையும்
உள்நின்றதோர் சுவையும்
உறுதாளத்து ஒலிபலவும் ஆனான்''

என்று இறைவனே பாடற் பண்ணாக அவற்றின் சுரங்களாக-தாளமாக விளங்குகிறான் என்கிறார் திருஞான சம்பந்தர்.

தேவாரத் திருமுறைகளில் தக்கராகம், பழந்தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, யாழ்மூரி, இந்தளம், சீகாமரம், காந்தாரம், பியந்தைக் காந்தாரம், நட்டராகம், செவ்வழி, காந்தார. பஞ்சமம், கொல்லி, கொல்லிக் கௌவாணம், கௌசிகம், பஞ்சமம், சாதாரி, பழம்பஞ்சுரம் நட்டபாடை முதலான பண்கள் பயின்று வந்துள்ளன.

திருமுறைகளில் வரும் பண்களுக்கு இன்றைக்கு வழங்கப்படும் பெயர்கள்தான் மாறியுள்ளன.

திருமுறைப் பண்களும் அவற்றிற்கான இராகங்களும் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1. நட்டபாடை | கம்பீரநாட்டை |
| 2. தக்கராகம் | காம்போதி |
| 3. காந்தாரம் | நவரோசு |
| 4. செவ்வழி | யதுகுலகாம்போதி |
| 5. அந்தாளிக்குறிஞ்சி | சாமா |
| 6. பழம் பஞ்சுரம் | சங்கராபரணம் |
| 7. மேகராகக் குறிஞ்சி | நீலாம்பரி |
| 8. கொல்லி கௌவாணம் | நவரோசு |
| 9. பழந்தக்கராகம் | சுத்தசாவேரி |
| 10. குறிஞ்சி | அரிகாம்போதி |
| 11. நட்டராகம் | பந்துவராளி |
| 12. வியாழக்குறிஞ்சி | சௌராஷ்டிரம் |
| 13. புறநீர்மை | பூபாளம் |
| 14. பஞ்சமம் | ஆஹிரி |
| 15. செந்துருத்தி | மத்யமாவதி |
| 16. தக்கேசி | காம்போதி |
| 17. கொல்லி | நவரோசு |
| 18. இந்தளம் | மாயாமாளவ கௌளை |
| 19. காந்தாரபஞ்சமம் | கேதாரகௌளை |
| 20. கௌசிகம் | பைரவி |
| 21. பியந்தைக் காந்தாரம் | நவரோசு |
| 22. சீகாமரம் | மாயாமாளவ கௌளை |
| 23. சாதாரி | பந்துவராளி |

ஆகவே தமிழிசை மிகத் தொன்மையானது. மிகப் பழமையான இசை என்பதால்தான் தமிழிசையைக் கர்நாடக இசை என்றுகூறுகிறோம். சுமார் 2500 ஆண்டு காலத்திற்கு முன்பே தமிழகத்தில் தமிழிசை சிறந்து விளங்கியது என்பதற்கான ஆதாரங்கள் தொல்காப்பியம், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை முதலான சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணிமுதலான ஐம்பெருங்காப்பியங்களில் எல்லாம் பரந்து கிடக்கின்றன. இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழும் சிறந்து விளங்கிய பண்டைத் தமிழகத்தின் பெருமையைத் 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்ற பரிபாடல் தொடர் சுட்டுகிறது.

இவ்வாறு மிகத் தொன்மையானது என்பதால்தான் தமிழிசையைக் கருநாடக இசை என்று கூறுகிறோம். இன்றைக்கு சங்கீத மும்மூர்த்திகள் என்று தியாகையர், சியாமா சாஸ்திரி. முத்துசாமி தீட்சிதர் ஆகிய மூவரை வையம் கொண்டாடுகிறது. இவர்கள் எல்லாம் 18 மற்றும் 19-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து இசைக்கு அருந்தொண்டாற்றியசான்றோர்கள் ஆவர். இவர்களுக்கும் மிக முற்பட்ட காலத்திலேயே அதாவது கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே தமிழிசைக்கு மகத்தான தொண்டு ஆற்றியவர்கள்தான் இன்றைக்கு ஞாலம் போற்றிக் கொண்டாடும் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசு சுவாமிகளும் ஆவர். சுந்தரமூர்த்தி சுவாமிகள் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டிலே வாழ்ந்திருக்கிறார். அதிலும் திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசு சுவாமிகளும் மிகப் பெரும் எதிர்ப்பிற்கிடையே அரசின் ஆதரவைப் பெற்றிருந்த சமண சமயத்தை எதிர்த்து மிக அற்புதமான இசைப் பணியை ஆற்றி அதன்மூலம் தமிழ் சமயத்தைத் தமிழ்ப் பண்பாட்டை-தமிழ்-கலை கலாசாரத்தைக் கட்டிக் காத்திருக்கிறார்கள் என்றால் அவர்களுடைய புகழையெல்லாம் உள்ளபடி எடுத்து விவரிப்பதற்குச் சேக்கிழார் பெருமான் கூறுவதைப் போல ஆதிசேஷனுக்கு உள்ளதைப் போல நமக்கும் ஆயிரம் நா வேண்டும்.

தேவாரம் தமிழ்வேதம். வேதத்தைக் கூறும் போதும் வேதம் ஓதுவது என்றுதான் கூறுகிறோம். தேவாரத்தை சொல்லும் போதும் தேவாரம் ஓதுவது என்றுதான் கூறுகிறோம். இன்னும் சொல்லப் போனால் இசை என்பதையே ஒரு வேதமாக காந்தர்வ வேதம் என்று சிறப்பித்துக் கூறுவார்கள். காந்தர்வ வேதமும் தமிழ் வேதமும் சேரும்போது அங்கே இறைவன் ஓடி வந்து அருள் செய்வான் என்பதில் யாருக்கும் எந்தஐயமும் வேண்டாம். அவ்வாறான தமிழ் வேதத்தை போற்றும் ஒப்பற்ற ஒரு விழாவான தேவார மூவர் இசைக் கலை விழா. மாதங்களில் சிறந்த மார்கழி மாதத்தில் ஆண்டுதோறும் கொண்டாடப் படுவது மிகப்பொருத்தமான ஒன்றாகும்.

வாழ்க தேவார இசை.

வாழ்க தேவார மூவர் திருப்புகழ்.

# ஆடல்



# காணீரோ...!

கம்பன் கவிநயமணி

**வே. தியாகராஜன்**

**(33)**


மதுரையம்பதியைக் கூன்பாண்டியன் அரசு புரிந்த காலத்தில்சேரனும் சோழனும் அவனுக்கு அடங்கியிருந்தனர். சோழன் தனது மகளான மங்கையர்க்கரசியாரைத் திருமணம் செய்து கொடுத்து, கல்வி கேள்விகளில் சிறந்தவரான குலச்சிறையாரையும் கூட அனுப்பி வைத்தான், குலச்சிறையாரின் கூரியமதியையும் நற்குணங்களையும் கண்ட பாண்டியன் அவரைத் தனக்கு மந்திரியாக்கிக் கொண்டான். பாண்டியன் உடல் கோணலாக இருந்தது போலவே, சமணர்களின் சேர்க்கையால், புத்தியும் கோணலாகிச் சைவத்தை விட்டு சமணத்தைத் தழுவினான். பாண்டிய தேசத்தில் சைவம் மங்கிச் சமணம் தழைக்கலாயிற்று. பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும் மட்டும் சைவநெறி தவறாதிருந்தனர். மதுரையில் மீண்டும் சமணம் மறைந்து சைவம் தழைக்கவேண்டுமென ஏங்கி, கோயிலில் சென்று இறைவனை வணங்கினர். அங்கு சிவசின்னம் தரித்த ஒரு வேதியர் வந்தார். சோழ தேசத்திலிருந்து வந்த அவரை நோக்கி 'ஏதாவது விசேடம் உண்டோ!' எனக் கேட்க, 'சோழ நாட்டில் சீர்காழி என்னும் ஊரில் சிவபாத இருதயர்என்பவரின் மகவாகத் தோன்றிய குழந்தையொன்று, மூன்று வயதில் சிவபெருமானருளால், அம்மையின் பால் கிடைக்க உட்கொண்டு சிவஞானம் பெற்று திருஞான சம்பந்தர் என்ற பெயருடன் சிவத் தலங்களெல்லாம் சென்று இறைவன் புகழைப் பாடி வருகிறார். இறைவனிடம் பொற்றாளம் முத்துச்சிவிகை, திருச்சின்னம், முத்துப்பந்தர் முதலான பெற்றார். திருவீழிமிழலையில் இறைவனிடம் படிக்காசு பெற்றார். திருமறைக் காட்டில் கதவு அடைக்கப் பாடினார். கூடிய சீக்கிரம் சோமசுந்தரப்பெருமானைத் தரிசிக்க மதுரைக்கும் வரலாம்.' என்றார். அது கேட்டு மகிழ்ந்த மந்திரியும் மகாராணியும், மதுரைக்கு வந்து சமணத்தை நீக்கிச் சைவம் தழைப்பதற்கான நிலையை ஏற்படுத்துமாறு ஞானசம்பந்தருக்கு ஒரு வேண்டுகோள் வீடுத்தனர். வந்த வேதியர் அந்த ஓலையை திருமறைக் காட்டிலுள்ள சம்பந்தப்பெருமானிடம் கொண்டு போய் கொடுத்தனர்.

''வெங்குரு வேந்தர் அடிபணிந்து அடியேன்
குலச்சிறை விளம்பு விண்ணப்பம்
இங்கெழுந்தருளிச் சமணிருள் ஒதுக்கி இறை
மகற்கு நீறளித்துப்
பொங்கிரும் பனைசூழ் தென்தமிழ் நாட்டைப்
பூதி சாதன வழி நிறுத்தி
எங்களைக் காக்க என்ற பாசுரம்
கேட்டெழுந்தனர் கவுணியற்கிறைவர்''

என்ற செய்தியைப் படித்து ஞான சம்பந்தர் மதுரையை நோக்கிப் புறப்பட, கூட இருந்த அப்பர் பெருமான் 'ஆ, தகாது! நீங்கள் குழந்தை' சமணர்கள் பாதகம் அஞ்சார். பல நாட்கள் பழகிய என்னையே அவர்கள் செய்த துன்பம் நினைக்கவே முடியாது. தவிரவும் உங்களுக்குக் கிரக நிலைகள் சரியில்லை என்றார்' ''அதைக் கேட்ட திருஞானசம்பந்தர் எந்தை எம்பெருமானான சிவபெருமானின் அருள் இல்லாதவர் போலத் தாங்கள் பேசலாமா!' எனக்கூறி, சிவனடியாரை நாட்கள், கோள்கள் ஒன்றும் செய்யா எனப் பதிகம் பாடியருளினார்.

திருச்சிற்றம்பலம்

''வேயுறு தோளி பங்கன்விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்து
என் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன்
வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே''
''தேனமர் பொழில் கொள் ஆலை விளை
செந்நெறுன்னி
வளர் செம்பொனெங்கு நிகழ
நான் முகனாதியாய பிரமா புரத்து
மறை ஞான ஞான முனிவன்



தானுறு கோளு நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரை செய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள்
வானில்
அரசாள்வராணை நமதே''

—திருச்சிற்றம்பலம்

இவ்வாறு கூறிய சம்பந்த மூர்த்தி மதுரை வந்தார். 'பரசமய கோளரிவந்தார்' 'சமண இருள கற்றும் ஞான சூரியன் வந்தார்' என்றெல்லாம் சின்னம் கூறி வரும்போது சமணர் எதிர்ப்பட்டனர். ஞான சம்பந்தர் பிள்ளையார் பாளையம் என இன்று விளங்கும் இடத்தில் சிறிது தங்கி பிறகு அங்கயற்கன்னி-ஆலவாயப்பன் திருக்கோயிலையடைந்து சமணர்களை வாது செய்து வெல்லத் திருவுள்ளம் செய்ய வேணும் எனப்பதிகம் பாடினார்.

திருச்சிற்றம்பலம்.

''காட்டுமாவதுரித்துரி போர்த்துடல்
நாட்ட மூன்றுடையாய் உரை செய்வன் நான்
வேட்டு வேள்வி செய்யா அமணகையரை
ஒட்டி வாது செய்யத் திருவுள்ளமே''

''செந்தெனா முரலும் திருவாலவாய்
மைந்தனே என்று வல்லமண் ஆசறச்
சந்தமார் தமிழ் கேட்ட மெய்ஞ் ஞானசம்
பந்தன் சொற் பகரும் பழி நீங்கவே''

திருச்சிற்றம்பலம்

வாகீசர் என்ற முனிவரின் மடத்தில் சம்பந்தப் பெருமான் தங்கினர். சமணர் எண்ணாயிர வரும் ஒருங்கு கூடி அபிசார வேள்வி செய்து, சம்பந்தர் தங்கிய மடத்தினை எரிக்குமாறு அக்கினிக்கடவுளை வேண்ட அவன் மறுத்தான். சமணர் தமது கைகளினாலேயே மடத்தில் தீ மூட்ட ஞானசம்பந்தர் 'பாண்டியனை மெதுவாக (பையவே)ச் சென்று பிடித்துக் கொள்ளுக என ஏவினார்.

திருச்சிற்றம்பலம்

''செய்யனே திரு ஆலவாய் மேவிய
ஐயனே! அஞ்சல் என்றருள் செய்யெனைப்
பொய்யராம் அவுணர் கொளுவுஞ் சுடர்
பையவே சென்று பாண்டியர்க்காகவே''

''அப்பன் ஆலவாய் ஆதி அருளினால்
வெப்பம் தென்னவன் மேலுற மேதினிக்
கொப்ப ஞான சம் பந்தனு ரைபத்தும்
செப்பவல்லவர் தீதிலாச் செல்வரே''

திருச்சிற்றம்பலம்

'பையவே சென்று பாண்டியற்காகவே' எனக் கூறியதால், பாண்டியனை எரிக்காது. அந்தத் தீ, வைப்பு நோயாகப் பிடித்தது. பாண்டி மாதேவி குலச்சிறையார் இருவரும் கூறிய யோசனையின் பேரில், பாண்டியன் தன்

நோயை ஞானசம்பந்தர் திருநீறிட்டுக் குண மாக்குவதற்கு ஒப்புக் கொண்டான். மந்திரியும் அரசியும் ஞானசம்பந்த மூர்த்தியைக் கண்ணாரக் கண்டு மகிழ்ச்சி கொண்டனர். சமணர்கள் அது கண்டு புழுங்கி, வலப்புறத்து நோயைச் சம்பந்த மூர்த்தியும் இடப்புறத்து நோயைத் தாம் தீர்ப்பதாகவும் கூறினர். பாண்டியன் உடன்பட, சமணர் அரசனின் இடப்புறத்தில் மயிர்ப்பீலியால் தடவி, கமண்டல நீர் தெளிக்க நோய் அதிகமாயிற்று. சம்பந்தர் தமது திருநீற்றுப் பையை அவிழ்ப்பது கண்டு சமணர் 'இது மாயமான நீறு' என்றனர். கோயில் மடைப்பள்ளியிலுள்ள சாம்பலை அள்ளிக் கொண்டுவரச் சொன்ன சம்பந்தப் பெருமான் மீனாட்சி சுந்தரரைத் தியானித்து, அந்த நீற்றை எடுத்து, தன் கையால் அரசனது வலது புறத்தில் தடவித் திருநீற்றுப் பதிகம் பாடினர்.

திருச்சிற்றம்பலம்

''மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு; துதிக்கப்படுவது நீறு
தந்திரமாவது நீறு; சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான்
திருநீறே''

''ஆற்றல் அடல் விடையேறும் ஆலவாயான்
திருநீற்றை
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன்
ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற
தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்
தாமே.''

திருச்சிற்றம்பலம்

வலப்புறத்து நோய் நீங்கியது, இடதுபுறம் அதிகமாயிற்று. பாண்டியன் வலப்புறம் இன்பமும் இடப்புறம் துன்பமும் கொண்டு ''இது என்ன'' என அதிசயித்தான்.

''மன்னவன் மொழிவான், 'என்னே மதித்த
இக்காலமொன்றில்
வெந்நரகு ஒருபாலாகும் வீட்டின்பம் ஒரு
பாலாகும்
துன்னு நஞ்சு ஒருபாலாகும் சுவையமுது ஒரு
பாலாகும்
என் வடிவு ஒன்றில் கற்றேன் இரு திறத்து
இயல்பும் என்பான்''.

ஞானசம்பந்தர் பாண்டியனின் வேண்டுகோளின்படி அவனது இடப்புற நோயையும் நீக்கினார். பாண்டியன் நோய் நீங்கியதுடன் கூனும் நீங்கி அழகு பெற்று சவுந்தர மாறன் எனப் பெயர் பெற்றான். ஞானசம்பந்தர் கண்ணால் கண்டதால் சட்சு தீட்சையும் தீண்டி விபூதி பெற்றதால் ஸ்பரிச தீட்சையும் பெற்று அவரிடம் உபதேசம் பெற்று உய்ந்தான்.

பாண்டியனது வெப்பு நோயை நீக்கி, கூன் பாண்டியனைச் சவுந்திரமாற பாண்டியன் ஆக்கிய பின், குலச்சிறையாரும் பாண்டி மாதேவியும் ஞானசம்பந்தரின் திருவடிகளில் விழுந்து வணங்கி சைவந் தழைப்பதற்கு ஆவன செய்யுமாறு வேண்டினர். 'இறைவன் திருவுள்ளத்தை அறிவோம்' எனக் கூறிய சம்பந்தர் மதுரைக் கோயிலையடைந்து 'சமணரை வாது செய்து வெல்லவேணுமென'' வேண்டிப் பதிகம் பாடினர்.

திருச்சிற்றம்பலம்

''வேத வேள்வியை நிந்தனை செய்துழல்
ஆதமில்லி அமணொடு தேரரை
வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே
பாதி மாதுடனாய பரமனே
ஞாலம் நின் புகழே மிக வேண்டுந்தென்
ஆல வாயில் உறையும் எம் ஆதியே''

''கூடல் ஆலவாய்க் கோனை விடைகொண்டு
வாடன் மேனி அமணரை வாட்டிட
மாடக் காழிச் சம்பந்தன் மதித்த இப்
பாடல் வல்லவர் பாக்கியவாளரே''

திருச்சிற்றம்பலம்

சிவபெருமான் இது கேட்டு 'உமக்கு வேண்டுவதுதான் எமக்கும் வேண்டும். சமணர் தோல்வியடைந்து கழுவேறுவர்' எனக் கூறியருளினார். சமணர்களும் வாதுக்குப் புறப்பட்டனர். அவர்கள் மனைவிமார்கள் 'பாண்டியனது நோயைத் தீர்க்க முடியாது ஒரு குழந்தையிடம் தோற்றீர்கள். பாண்டியன் சிவபக்தனாகி விட்டான். இனி என்ன செய்வது? நீங்கள் செல்ல வேண்டாம். நாங்கள் நேற்று கெட்ட கனவுகள் கண்டோம். நமது இடங்களில் சிவ வேடங் கொண்டவர்கள் உலாவக் கண்டோம். நமது இடங்களை யானை ஒன்று அழிக்கக் கண்டோம். நீங்கள் கழுவேறுவது போலவும் நாங்கள் அழுவது போலவும் கண்டோம். உங்கள் கல்வியை எல்லாம் கள்வன் கவர்ந்தானா! நெருப்பினால் அழிந்ததா? நீரில் அடித்துச் செல்லப்பட்டதா? சொல்லுங்கள். நம் முன்னோர்கள் வேள்வி செய்து யானை, பாம்பு, பசு இவற்றையனுப்பித் தோல்வியடைந்தது நினைவில்லையா?' என்றெல்லாம் கூறித் தடுக்க, அவர்களை மீறிச் சமணர் புறப்பட்டனர். அரசனுடைய சபையில் சென்று சம்பந்தப் பெருமானிடம் 'குழந்தாய்! தற்செயலாகப் பாண்டியனது வெப்பு நோய் நீங்கியது உன் மந்திரத்தின் சக்தி என எண்ணி கர்வமடையாதே, நத்தையும் சங்கும், வண்டும் மண்ணில் ஊர்ந்து செல்லும் கீறு சில சமயத்தில் எழுத்துக்கள் மாதிரி அமையும். அவை எழுதின என்று கூற முடியுமா? உமது மந்திரத்தையும் எமது மந்திரத்தையும் ஓலைகளில் எழுதுவோம். சிவன் உறையும் இடத்தில் செய்தால் அவன் உங்கள் பக்கம் சேர்ந்து கொண்டு எங்களுக்குக் கெடுதி செய்வான். ஆதலால் இரண்டு ஏடுகளையும் ஊருக்கு வெளியில் வைத்துத் தீமூட்டுவோம். எரியாத ஏடு வெற்றி பெற்றது என ஏற்றுக் கொள்வோம்' என்றனர். அவ்வாறே தீ மூட்டப்பட்டு, சம



ணர்கள் தமது மந்திரங்களைத் தீயிலிட, அவைகள் சாம்பலாயின. சீர்காழிப்பிள்ளையார் தமது தேவார ஏடுகளில் திருக்கயிறு சார்த்திப் பார்க்க

திருச்சிற்றம்பலம்

''போகமார்த்த பூண்முலையாள் தன்னொடும்
பொன்னகலம்
பாகமார்த்த பைங்கண் வெள்ளேற்றண்ணல்
பரமேட்டீ
ஆகமார்த்த தோலுடையான் கோவண
ஆடையின் மேல்
நாகமார்த்த நம் பெருமான் மேயது
நள்ளாறே''.

''தண்புனலும் வெண்பிறையும் தாங்கிய தாழ்
சடையன்
நண்பு நல்லார் மல்கு காழி ஞானசம்பந்தன்
நல்ல
பண்பு நல்லாறு ஏத்து பாடல் பத்துமிவை
வல்லார்
உண்பு நீங்கி வானரோடுலகில் உறைவாரே''.

திருச்சிற்றம்பலம்.

என்ற திருப்பதிகம் வர அதை எடுத்துத் தீயிலிட்டார். பசுமையாகவே இருந்தது அப்பதிகம் எழுதப்பட்ட ஏடு. எனவே சைவவுலகில் அதைப் பச்சைப்பதிகம் என அழைக்கலாயினர். ஞானசம்பந்தர் அனல் வாதத்தில் வெற்றி பெற்ற இடம் சம்பந்த நத்தம் (தற்காலத்தில் சாம்ப நத்தம்) என்ற பெயருடன் விளங்குகிறது. தீயிலிட்ட ஏட்டைத் திரும்ப எடுத்துக் கொண்ட சம்பந்தர் பாண்டியனை உற்று நோக்கினார்.

சமணர்கள் மேலும் கோபம் கொண்டு சம்பந்தரைப் பார்த்து 'எங்கள் ஏடெல்லாம் வெந்து சாம்பலாக உங்கள் ஏடு மாத்திரம் பச்சென்று இருந்தது என்றால் நீர் அக்கினியை கட்டிவீட்டீர். நம் இருவருடைய ஏடுகளையும் வைகையில் இடுவோம். நீரை எதிர்த்துச் செல்லும் ஓலை வெற்றி பெற்றதாகவும், தண்ணீருடன் செல்லும் ஓலை தோல்வியடைந்ததாகவும் கொள்வோம். வெற்றி பெற்றவர்க்கு தோற்றவர் அடிமையாக வேண்டும்' என்றனர். சம்பந்தப் பெருமான் 'அதெல்லாம் வேண்டாம் சிவாபராதம் செய்யும் நீங்கள் தோல்விஅடைந்தால் கழுவேற வேண்டும்' என்றனர். குலச்சிறையார் கழுமரங்களைச் சித்தப்படுத்தினார்.

அப்போது சம்பந்தப் பெருமான் 'இனியாவது நீங்கள் சிவசின்னந்தரித்து சிவனடியார்களாக மாற இசைவீர்களா!' எனக் கேட்க 'முன்பு அனலில் வென்றோம், புனலில் யாதாக முடியுமோ என எண்ணி, நயந்து பேசி, இவ்வாதத்திலிருந்து தப்பப்பார்க்கின்றீரா! வாதம் செய்வீராக' என்றனர். சமணர் ஏடுகளை எழுதி, வைகையிலிட அவை அடித்துச்செல்லப்பட்டன. 'வேதம் உண்மையானது என்றால், வேதத்தினால் அறியப்படும் பொருள் சிவபெருமான் என்பது உண்மையானால் இந்த ஓலை நீரை எதிர்த்துச் செல்லட்டும்' என்றனர்.

''சிறையேய் புனல்சூழ்வேணுபுரச் செல்வர்
யாரும் தெளிவெய்த
மறையே வாய்மையுரையாகின்; மறைகள்
முழுதும் துணிபொருள்தான்
பிறைவேய் வேணிப்பிரானாகில் பெருந்திரை
யெதிரே செல்கெனா
முறையே பதிகம் எடுத்தெழுதிவிட்டார்
முழங்கி வருபுனலில்''

திருச்சிற்றம்பலம்

சம்பந்தப்பெருமான் புனலில்விட்டபதிகம்

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எலாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே''.

''நல்லார்கள் சேர்புகலி ஞானசம்பந்தனல்ல
எல்லார்களும் பரவும் ஈசனை ஏத்து பாடல்
பல்லார்களும் மதிக்கப் பாசுரம்''
சொன்னபத்தும்
வல்லோர்கள் வானோருலகாளவும்வல்
லரன்றே''

திருச்சிற்றம்பலம்

இறைவனது அருளான கயிறு இழுக்க, சம்பந்தப்பெருமானது ஏடு நீரை எதிர்த்துச் சென்றது. சமணர்கள் தோல்வியை ஒப்புக்கொண்டனர். 'இனிமேலாவது சிவனை வணங்குவீர்களா!' எனக் கேட்க இணங்காத சமணர் தாமே கழுவேறினர். சிலர் நீறிட்டுக் கொண்டனர். திருநீறு கிடைக்காதவர் மாட்டுக் கோமயத்தை நெற்றியில் அணிந்தனர். சிலர் நீறணிந்தவரின் நெற்றியில் தம் நெற்றியை ஒட்டவைத்துக் கொண்டனர். சிலர் பசுவின் கன்றையே தோளில் சுமந்தனர். நீரை எதிர்த்துச் சென்ற ஏட்டினைத் தேடிச் சென்று சம்பந்தப்பெருமான் ஓரிடத்தில் நின்றனர். அந்த இடம் இன்று திருவேடகம் என விளங்குகிறது.

திருச்சிற்றம்பலம்

''வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னிய திருவடி புது மலரவை கொடு
மன்னி மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலரேடகத் தொருவனே''

''கோடுசந்தனம் அகில் கொண்டிழ வைகநீர்
ஏடசென்றணை தரும் ஏடகத் தொருவனை
நாடு தென்புகலியுண் ஞானசம்பந்தன்
பாடல் பத்திவை வல்லார்க் கில்லையாம்
பாவமே''

திருசிற்றம்பலம்

என்று பதிகம் பாடிய காலத்து வில்வமரத்தடியில் ஒரு சுயம்பு லிங்கம் தோன்றியது. சிவபெருமான் ஒரு வேதியர் வேடங்கொண்டு சம்பந்தப் பெருமானை 'என் இளைய மைந்தனான முருகன் போன்றவனே! வருக!' என அழைத்தனர். சம்பந்தர் அவரிடம் ஏட்டைப் பற்றிக் கேட்க, அவர் ஏட்டைக் கொடுத்து மறைந்தார். பாண்டியன் அங்கு சிவபெருமானுக்குக் கோயில் அமைத்தான். ஞான சம்பந்தர் அனைவரிடமும் விடை பெற்றுச் சோழநாடு சென்றனர். பாண்டியன் தேசத்தில் சைவம் தழைத்து அனைவரும் இன்புற்று வாழ்ந்தனர்.

## கற்பின் செல்வி

கடற்கரை அருகிலுள்ள ஒரு ஊரில் வசித்து வந்த ஒரு வணிகனுக்கு ஒரு மகள். செல்வச்சீமானான அவன் மதுரையிலிருக்கும் தன் மருமகனுக்கு அந்தப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க எண்ணினான். ஏற்கனவே அந்த மருமகனுக்கு திருமணமாகியிருந்தது. எனினும் வணிகன் தன் மகளை இளைய தாரமாகவாவது கொடுக்க எண்ணினான். திடீரென்று ஒரு நாள் வணிகன் இறந்தான். அவனது மனைவியும் மறைந்தாள். மதுரையிலிருந்த மருமகனுக்குச் செய்தி எட்டியது. தன் அருமை மாமனும் மாமியும் இறந்ததையறிந்துமிக வருந்திய அந்த இளம் வணிகன் மாமன் வீடு வந்து சில நாள் தங்கினான். தன் மாமன் மகளை அழைத்துக் கொண்டு போய் மதுரையில் உற்றார் உறவினர் அறிய திருமணம் செய்து கொள்ள எண்ணி, அவளையும் அழைத்துக் கொண்டு மதுரை நோக்கிப் புறப்பட்டனள். செல்லும் வழியில் ஒரு நாள் திருப்புறம்பயம் என்னும் ஊரையடைந்து அங்கு நீராடி உணவுண்டு தங்கினான். கோயிலுக்கு உட்புறத்தில் அந்தப் பெண் ஓய்வெடுத்துக் கொண்டாள். கோயிலின் வாயிற்படிமீது தலைவைத்துப் படுத்துக் கொண்டிருந்தான் அந்த வணிகன். விதி வசத்தால் அவனை பாம்பு தீண்டியது. இறந்த அவனைக் கண்டு அந்தப் பெண் 'என் நாயகனே! என் கண்மணியே! என் தந்தையின் அருமை மருமகனே! அழகனே! வணிகமணியே! பாம்பின் வாய்ப் பட்டாயோ! தேவலோகம் சென்று தேவலோகப் பெண்களை அடைய ஆசைப்பட்டு அங்கு சென்றாயா! அல்லது குபேரன் மகளையடைய அளகாபுரம் சென்றாயா? உன்னைக் கடித்த நாகர்களின் உலகம் சென்று நாக கன்னிகைகளையடைய எண்ணி விட்டாயா? எமபுரத்தில் என் தாய் தந்தையரைக் கண்டாயோ? அவர்களைப் பணிந்தாயோ? நானும் கூட வந்திருந்தால் என் தாய் தந்தையரைக் கண்டிருப்பேனே!' என்றெல்லாம் புலம்பி அழு

தாள். அது சமயம் இறைவனைத் தலங்கள் தோறும் சென்று கண்டு ஏத்திப் பணிந்து பாடும் சம்பந்தமூர்த்தி அவ்விடம் வந்தனர்.

அந்தப் பெண்ணைக் கண்டு இரக்கமுற்று 'இறந்து கிடந்த வணிகனின் உடம்பு பூராவும் மருந்துருவாகும் வண்ணம் இறைவனைத் தியானித்தார். பாம்பு கடித்த இடத்திலிருந்து நஞ்சு கொப்பளித்து வெளிவந்தது. இறந்தவன் மீண்டும் எழுந்தான். அவன் இறந்தபோதும், மீண்டும் எழுந்தபோதும், அவனை அந்தப் பெண்மணி தீண்டாது நிற்கும் கற்பு நிலை கண்டு மகிழ்ந்தார். சம்பந்தப் பெருமான், 'வணிகனே! இந்தப் பெண்ணை இங்கேயே திருமணம் செய்து கொள் என்ன ''பெரீயீர்! எங்கள் மரபினர் யாருமே இல்லாமல் சாட்சியு மில்லாமல் எப்படித் திருமணம் செய்து கொள்ளுவேன்? ' எனக் கேட்க, 'அப்பா! அந்தப் பெண் பிறந்த நாளிலிருந்து அவளை உனக்குத்தான் அளிக்க வேண்டுமென அவள் தந்தை கூறி வந்தது உன் உற்றார் உறவினர் யாவரும் அறிவர். மேலும் இங்குள்ள வன்னி மரம், கிணறு, சிவலிங்கம் இம்மூன்றையும் சாட்சியாக வைத்துக் கொண்டு திருமணம் முடித்துக் கொண்டு மதுரை திரும்புவாயாக' எனக்கூற வணிகன் அவ்வாறே செய்தான்.

மதுரை திரும்பியதும் இருமனைவிகளுட னும் நன்கு வாழ்ந்த வணிகன் மக்களைப் பெற் றான். மூத்தமனைவியிடம் பிறந்த மக்கள் மூர்க்கர்களாயிருந்தனர். இளையாளது ஒரே மகனை மூத்தவனின் மக்கள் அடிக்க, இளை யாள் மூத்தாளின் மக்களைக் கண்டித்தாள். இது கண்ட மூத்தவள் 'நீ யார்! எந்தவூர்! என்ன ஜாதி! யாருடைய மகள்! என் கணவ னுக்கு ஆசைப்பட்டு வந்த உனக்கு எதற்காகப் பேச்சும் பெருமிதமும்? நீ என் கணவனை மணம் புரிந்து கொண்டதற்கு யார் சாட்சி!' எனக் கேட்க மனம் வருந்திய இளையவள் 'பாம்பின் வாய்ப்பட்ட அன்று நம் கணவனுக்கு உயிர் கொடுத்த திருப்புறம்பய சிவலிங்க நாயகனும், வன்னி மரமும், கிணறுமே சாட்சி' என்றனள்.

''அரவின் வாய்ப்பட்ட வைகல் ஆருயிரளித்த
ஞானப்
புரவரலருளால் எங்கோன் புறம்பய நாதன்
வன்னித்
திருவொடு கிணறு காணச் செய்தனன் சான்று
அம் மூன்றும்
கரிகளும் உள்ள என்றாள் கற்பினால்
ஒப்பில்லாதாள்''.

இது கேட்டு மூத்தாள் கைக்கொட்டிச் சிரித்து 'அப்படியானால் அந்த மூன்று சாட்சிகளையும் இங்கு வரவழைப்பாயாக' என்றனள். இது கேட்டு மிக வருந்திய இளையவள் 'தந்தையை இழந்த எனக்கு யார் துணை? மாமனாக வந்து வழக்குரைத்த பெருமானே! எனக்கு ஏற் பட்டுள்ள அவமானத்திலிருந்து எனைக் காத் தருள்க' என வேண்டிக் கொண்டு உணவில் லாது அன்று உறங்கினாள். மறுநாள் காலை யில் மதுரைக்கோயில் வடகிழக்கு எல்லையில் வன்னிமரமும், கிணறும், லிங்கமும் தோன்றின. மூத்தாளை அழைத்து வந்து இளையாள் அம் மூன்று சாட்சிகளையும் காட்டினாள். அன்று முதல் இன்று வரை அம்மூன்றும் மதுரையில் உள்ளன. தெய்வமே அந்தப் பெண்ணிற்கு வசப்பட்டது என்றால் கற்பின் பெருமையை எவ்வாறு கூறுவது?

''அவ்விடைத் தருவும் நீரும் அன்றுபோல்
இன்றும் சான்றாய்
இவ்விடைப்பட்ட என்ன அதிசயம்! எவர்க்கும்
தேறாத்
தெய்வமும் எளிவந்து அங்கைக் கனியெனத்
திருவினன்னாள்
கைவசப்பட்டதென்றால் கற்பினுக்கு அரிது
ஏது - அம்மா''?


மூத்தவள் இது கண்டு பயந்தாள். கணவன் மூத்தவளின் கொடுமையைக் கேட்டு 'இவள் எனக்கு மனைவியல்ல' எனத் தள்ளிவிட்டான். அந்நிலையில் இளையவள், கணவனது திருவடி களை வணங்கி 'அவள் எனது கற்பை நிலை நாட்ட உதவினாள். எனவே அவள் எனக்குத் தீங்கு செய்யவில்லை. அவள் எனக்குஅன்னை போன்றவள்', எனக் கூறக் கணவன் ஒப்புக் கொண்டான். அனைவரும் நன்கு வாழ்ந்தனர். சுபம். சுபம். சுபம்.

திருவிளையாடற்புராணத்தை அகஸ்தியர் மற்ற முனிவர்களுக்குக் கூறியதாக சம்பிர தாயம். புராணம் கேட்ட முனிவர் பெருமக்கள் யாவரும் மதுரையைத் தரிசிக்க விரும்பினர். ஒரு நாள் காசியில் கங்கை நீராடி உலக நாயக னான விசுவநாதப் பெருமானை வணங்கி, சிவநாமம் கூறிக் கொண்டே தமது யோக சக்தி யினால் ஆகாயமார்க்கமாகப் புறப்பட்டனர். வழியில் ஹேமகூடம், ஸ்ரீசைலம், திருக்கோ கரணம், திருவஞ்சைக்களம், திருவாலங்காடு, காஞ்சிபுரம், திருமாற்பேறு, திருக்கழுக்குன்றம், திருவோத்தூர், திருவண்ணாமலை, திருக்கோவி லூர், பழனி, திருவதிகை, சிதம்பரம், சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில், திருக்குறுக்கை, திரு வெண்காடு, மாயூரம், திருக்கடவூர், திருவிற் குடி, திருச்செங்காட்டங்குடி, திருக்கோடிக்கா, திருவாரூர், வேதாரண்யம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள், திருச்சேய்ஞ்ஞலூர், கும்ப கோணம், சுவாமிமலை, திறப்புறம்பயம், திருவையாறு, கண்டியூர், திருவானைக்கா, திருச்சி முதலான தலங்களைத் தரிசித்து மதுரையை அடைந்து பொற்றாமரையில் நீராடி சோமசுந்தரப் பெருமானை வணங்கி னர். சிவலிங்கப் பெருமான் அவர்களது பக்தி யைக் கண்டு மகிழ்ந்து அவர்களுக்குக் காட்சி யளித்தனர். முனிவர்கள் தத்தம் பெயரால் ஒவ்வொரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து சிவானந்தம் பெற்று பக்தியின் உருவாகவே விளங்கிக்கொண்டு உலகை வாழ்வித்துக்கொண் டுள்ளனர்.

திருவிளையாடற்புராணம் கேட்போர், படிப்போர், எழுதுவோருக்கு சகல நன்மை களும் கிடைக்கும் என்பர் பெரியோர்.

**(நிறைவு பெற்றது)**

# பன்னிரு ஆழ்வார்கள்



பருத்தியூர்

டாக்டர் கே. சந்தானராமன்

R. RAJU
Dy Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

## 5. நம்மாழ்வார்

தாமிரபரணி பாயும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள குருகூர் என்ற தலத்தில் வாழ்ந்து வந்த பொற்காரியார் சிறந்த திருமாலடியார் ஆவார். அவரது குமாரர் காரியார் மலைநாட்டுத் திருப்பதியாகிய திருவண்பரிசாரம் என்ற ஊரைச்சேர்ந்த உடைய நங்கையைத் திருமணம் செய்து கொண்டார். அத்தம்பதியர் திருக்குறுங்குடிப் பெருமானாகிய நம்பியைச் சேவித்து மக்கட்பேறு வேண்டினர்.

''நாமே உமக்கு மகவாகத் தோன்றுவோம்'' என்று அர்ச்சகர் வாய்மொழியாக அருளினார் நம்பி. அதன்படி உடையநங்கை கருத்தரித்து வைகாசி சுக்கிலபட்ச சதுர்த்தசி திதியில் விசாக நட்சத்திரத்தில் ஓர் ஆண் மகவைப் பெற்றெடுத்தாள்.

அக்குழந்தை ஸ்ரீபகவான், ஸ்ரீகௌஸ்துபம் என்னும் மணிமாலை-சேனை முதலியார் என்னும் திருமாலின் படைத்தலைவர் ஆகிய மூவரது அம்சமாகத் தோன்றியது. குழந்தை பாலுண்ணுதல், அழுதல் போன்ற இயற்கையான செயல்கள் எதுவுமின்றி இருந்தது. உலக வழக்கத்துக்கு மாறாகக் காணப்பட்ட அக்குழந்தையை 'மாறன்' என்று அழைத்தனர்.

திருக்குருகூர் திருக்கோயிலின் அருகே ஆதிசேஷனின் அம்சமாக ஒரு புளியமரம் ஏற்கனவே தோன்றியிருந்தது. பெற்றோர் குழந்தை மாறனை அப்புளிய மரத்தில் கட்டிய தொட்டிலில் எழுந்தருளப் பண்ணினர்.

கருவிலே திருவுடையவராகத் தோன்றிய மாறன் பிறந்த பொழுதே தன்னைத் தீண்ட வந்த 'சட'மென்னும் வாயுவைக் கோபித்ததால் 'சடகோபன்' என்னும் பெயரும் அவருக்கு உண்டாயிற்று. இவர் எப்போதும் பெருமாளின் திருவடி நினைவாகவே இருப்பது கருதி விஷ்ணு ஆலயங்களில் பாதுகை 'ஸடாரி' என்றும் 'ஸடகோபம்' என்றும் பெயர் பெற்றுள்ளதென்பர்.

பதினாறு வயது வரை சடகோபர் திருப்புளிய மரத்தின் அடியிலேயே கண்மூடி மௌனியாய் பகவத் தியானத்தில் ஆழ்ந்து அமர்ந்திருந்தார். தனதம்சமும் பொருந்திய சடகோபருக்குச் சேனை முதலியார் நேரில் வந்து வைணவ நியதிகளையும் சகல மந்திர உபதேசமும் செய்தருளினார். அந்நிலையில் ஒளிச்சுடராய் புளியமரத்தடியில் அமர்ந்திருந்தார். அப்போது மதுரகவியாழ்வார் அயோத்தியில் இருந்தார். அங்குத் தென்திசையில் ஒரு ஜோதி தோன்றக் கண்டார். அதைக் காண அவர் தென்னாடு திரும்பினார். திருக்குருகூரில் ஜோதி திருக்கோயிலில் மறையக் கண்டார். அந்த ஜோதியாக வந்து தம்மை அங்கு அழைத்து வந்தது திருப்புளியமரத்து ஆழ்வார்தான் என உணர்ந்தார் மதுரகவியார்.

ஞானமுத்திரையுடன் மோனநிலையில் இருந்த சடகோபரை எழுப்ப எண்ணி அவர் அருகே சிறு கல்லை இட்டார். அவர் கண் விழித்தார். ''செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்!'' என்று சடகோபரிடம் வினவினார் மதுரகவியாழ்வார். அதுவரை பேசாதிருந்து வந்த சடகோபர் 'அத்தைத் தின்று அங்கே கிடக்கும்' என்றார்.

அணுவுருவாகிய ஆத்மா (சிறியது) அறிவற்ற அசித்தாகிய உடலில் கிடந்தால் என்னாகும் என்பது மதுரகவிகளின் வினாவின் உட்கருத்து. அணுவுருவாகிய ஆத்மா சரீரத்தைச் சார்ந்த இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் என்பது சடகோபர் தந்த பதிலின் பொதி பொருள்.



மதுரகவிகள் மாறனின் திருவடிகளில் விழுந்து தன்னைச் சீடனாக ஏற்க வேண்டினார். சடகோபரும் அவ்வாறே அவரைச் சீடராக ஏற்று நல்லுபதேசம் செய்தருளினார்.

ஸாமவேத ஸாரமாகிய திருவாய்மொழி என்னும் திவ்யப் பிரபந்தத்தை அவருக்கு உபதேசித்தருளினார். மற்றும் முறையே ரிக், யஜீர், அதர்வண வேதங்களின் ஸாரமாக திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஆகியவற்றையும் உபதேசித்தருளினார். ஆகவே நம்மாழ்வார் 'வேதம் தமிழ்ச் செய்த மாறன்'' என்ற புகழுக்கு உரியவரானார்.

சீலத்தாலும் ஞானத்தாலும் பக்தியாலும் சிறந்து விளங்கிய சடகோபரை அனைவரும் 'இவர் நம்மவர்' என்று உரிமையுடன் போற்றினர். அதனால் 'நம்மாழ்வார்' என்னும் திருப்பெயர் பெற்றார். தம்மைக் காணவந்த திருமாலடியார்களை இவர் 'பொலிக பொலிக' என்று வாழ்த்தியருளினார். பெருமாள் இவருக்கு மகிழமாலை ஒன்றைக் கொடுத்திருந்தார். அதனை அணிந்திருந்த காரணத்தால் 'வகுளாபரனர்' என்ற பெயரும் ஏற்பட்டது. பரசமயங்களைத் தனது உயர்ந்த ஞானமென்னும் அங்குசத்தால் அடக்கினார். ஆகவே 'பராங்குசர்' என்னும் திருப்பெயரும் பெற்றார்.

ஆழ்வார்களில் தலைமை பெற்றுத் திகழ்ந்த நம்மாழ்வார். மற்ற ஆழ்வார்களைத் தனது அங்கங்களாகக் கொண்டிருந்தார் என்பர். அவ்வகையில் பூதத்தாரைத் தலையாகவும், பொய்கை பேயாழ்வார்களைக் கண்களாகவும், பெரியாழ்வாரை முகமாகவும், திருமழிசையாழ்வாரைக் கழுத்தாகவும், குலசேகர ஆழ்வாரையும் திருபாணாழ்வாரையும் கைகளாகவும், தொண்டரடிப்பொடி ஆழ்வாரைத் திருமார்பாகவும், திருமங்கையாழ்வாரைக் கொப்பூழ் ஆகவும், மதுரகவியாழ்வாரைப் பாதமாகவும் கொண்டிருந்தார் என்பர்.

நம்மாழ்வார் 35 திவ்யதேசங்களைப் (திருத்தலங்களைப்) புகழ்ந்து பாடியுள்ளார். முப்பத்தோராண்டுக் காலம் திருப்புளிய மரத்தடியில் எழுந்தருளியிருந்து பல அற்புதங்களைச் செய்தார்.

கடவுளை 'உயர்வு அற உயர்நலம் உடையவன்' என்றும் 'அவரவர் இறையவர் குறைவிலர்' என்றும் நம்மாழ்வார் கீழ்க்கண்ட திருவாய் மொழிப் பாசுரங்களில் அருளியுள்ளார்.

''உயர்வு அற உயர்நலம் உடையவன்யவன் எவன்
மயர்வு அற மதிநலம் உடையவன் யவன் எவன்
உயர்வு அறும் அமரர்கள் ஆதிபதி யவன்எவன்
துயர்வு அறு சுடர்அடி தொழுதெழு என் மனமே?''

.'அவரவர் தமதறிவு அறிவகை வகை
அவரவர் இறையவர் என அடி அடைவர்கள்
அவரவர் இறையவர் குறைவிலர் இறையவர்
அவரவர் விதிவழி அடைய நின்றனரே.

# அருள்நெறி காட்டிய அமைச்சர் சேக்கிழார்

## கோவூர் தாசன்

### இறையனார் அடி எடுத்து கொடுத்தார்

கரும்பினையே சுவைப்பதற்குக் காசுமுண்டோ?
கற்கண்டை விரும்பாத குழந்தையுண்டோ?
பெருமன்னன் வேண்டுதலை மகிழ்வாய் ஏற்றே
பேரம்பலத்தான்வாழ் தில்லை சென்ற
கருவினிலே திருவுடைய சேக்கி ழார் நற்
கங்கையிலே நீராடி எழுந்தே கூத்தன்
திருவுருவம் முன்சென்றே கரங்கள் கூப்பித்
தில்லைநட ராசனையே வணங்கி நின்றார்.

நலமுடனே அடியார்கள் சரிதம் தன்னை
நான்பாடவிழைந்தேயுன் முன்வந் துள்ளேன்
அலகில்சோ தியனே! யான் பாடு தற்கே
அடியெடுத்துத் தரவேண்டும் நீர்தா
னென்றார்
மலமழிக்கும் மதிச்சடையன் அடியார் துன்பம்
மாற்றியருள் செய்பவனின் அருளா லாங்கே
'உலகெலாம்' என்றவொலி வானில் கேட்க
உமைபாகன் அருள்கண்டே உருக லானார்.

தில்லை மூ வாயிரவர் ஒலியைக் கேட்டார்
திகைத்திட்டார்; கைகூப்பி வணங்க லானார்
எல்லையிலா மகிழ்வுடனே சேக்கிழார்க்கு
இறைவனணி மாலையினைச் சூட்டி நின்றார்
முல்லைநிகர் திருநீறும் தந்தார்; சென்னி
முடிந்திட்டார் பரிவட்டம்; அமைச்சர்
கோவை
எல்லோரும் அழைப்பித்தே ஆயி ரங்கால்
எழில்மண்ட பந்தன்னில் அமரச் செய்தார்.

சீர்சைவப் பெரியோர்கள் நால்வர் தம்மைச்
சிரந்தாழ்த்திவணங்கியபின் சேக்கி ழார்தாம்
ஊர்ஊராய்ச் சென்றக்கால் கண்ட; கேட்ட
உற்றபல கல்வெட்டால் உணர்ந்துகொண்ட
பேர்பெற்ற அடியார்கள் சரிதங் கூறும்
பெருமளவுக் குறிப்புகளின் துணையைக்
கொண்டே
தேர்ந்தஅடி 'உலகெலாம்' எனத்தொடங்கி
திருத் தொண்டர் புராணத்தை இயற்ற
லானார்,

### பெரியபுராண அரங்கேற்றம்

யானையோடு தேர், புரவி காலா ளென்னும்
நான்குவகை யணிகளுடன் திரண்டு வந்த
சேனையொடு தில்லைநகர்ப் போந்தமன்னன்
செருவென்ற மகிழ்வுடனே காணப் பட்டான்
மோனைக்குப் பின்னெதுகை மொழிதல் போல
முடிமன்னன் பின்னாலே கூத்தர் வந்தார்
தேனைவிடத் தித்திக்கும் புராணம் செய்த
திருமகனார் எதிர் கொண்டார் அரசர் தம்மை

தொண்டரவர்ப் புகழ்சாற்றும் புராண நூலைத்
தொகைமன்னன் அரங்கேற்ற நாள்
குறித்தான்
வண்ணமிகும் சித்திரையின் ஆதி ரைநாள்
வளமிக்க நன்னாளாய்த் தேர்ந்தெடு த்தான்
எண்ணற்ற தமிழ்ப்புலவர், சான்றோர் மன்னர்
எல்லோர்க்கும் அழைப்போலை அனுப்பி
வைத்தான்
தண்ணமுதத் திருநாளில் தில்லை தன்னில்
தமிழ்ச்சான்றோர் கடலலைபோல் கூடி
நின்றார்.

தில்லையிலே கூத்தரசன் வாழு கின்ற
திருக்கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில்
முல்லையொடு நறுமலர்கள் தூவிப் பட்டில்
முகிழ்ந்திட்ட மூவிருகால் பீடந் தன்னில்
வல்லபிரான் யாத்ததிரு முறையை வைத்தார்
வாழ்த்தியருள் புரிந்திடவே வணங்கி
நின்றார்
புல்லரிக்கச் செவிசாய்த்தார்; சேக்கி ழார்நற்
பொருள்விளக்கிக் கூறுகையில் மெய்
சிலிர்த்தார்.

சொல்நயத்தைக் கேட்டோர்கள் சொக்கி
நின்றார்
சோதனைசேர் கதைகேட்டோர் விக்கி
நின்றார்
கல்லிலே உடல்பூட்டி கடலிட் டாலும்
கலங்காத பக்தியினைக் கேட்(டு)உ வந்தார்
பல்சமயம் சார்ந்தாரும் பக்தி யென்னும்
படகினிலே பேதமின்றிப் பயணஞ் செய்தே
நல்வீட்டைப் பெற்றிட்ட விளக்கம் கேட்டோர்
நயனங்கள் நீர்சொரியச் சமைந்து நின்றார்.

பன்னிரண்டு திங்கள்கள் விளக்கங் கேட்டப்
பல்லோர்க்கும் அநபாயன் வசதி செய்தான்
முன்னமொரு சித்திரை ஆ திரைதொ டங்கி
முடித்திட்டார் அடுத்துவந்த ஆண்டந் நாள்
கன்னலதோ! நறுந்தேனோ! என்ற வாறு
கவியின்பந் தனைமாந்திக் களித்தார்மாந்தர்
மன்னவனோ தான்பிறந்த பயனைப் பெற்றான்
மகிழ்ச்சியெனுங் கடலாடிக் களித்துநின்றான்.

## பார்புகழ்கொண்ட பன்னிரண்டாம் திருமுறை

வேலவனின் திருக்கரங்கள் பன்னிரண்டு
விளங்குசிவ ஞானபோதச் சூத்தி ரங்கள்
மாலவர்தம் மந்திரநல் எழுத்துக் கள்; நன்
மாதங்கள் ஆழ்வார்கள், ஆதித் தர்கள்
சீலர்அகத் தியர்தம்மின் மாண வர்கள்
சைவஅனுட் டானத்தில் தொடுமி டங்கள்
கோலமிகு அரம்பையர்கள்; கணாக்ர கண்யர்
குறள்பெற்ற நற்பெயர்கள் பன்னி ரண்டாம்

பண்நல்கும் சுரஸ்தானம் பன்னி ரண்டாம்
பழகுதமிழ் உயிரெழுத்தும் பன்னி ரண்டே
வண்ணமிகும் அந்தணர்செய் அறங்கள், இராசி
வகையுடனே திருமண்வைக் கும்இ டங்கள்,
மண்மீதில் பிறர்க்காகச் சிலுவை யேற்ற
மகான்ஏசு சீடர்கள்; திணை, தம் மோடு
எண்ணிறைந்த கீர்த்திகளைப் பெற்ற
'எண்'ணை
எண்ணுகையில் அவ்வெண்ணே
பன்னிரண்டாம்.

சீர்மேவு எண்ணான பன்னி ரண்டின்
சிறப்புகளை உணர்ந்திட்ட கார ணத்தால்
தார்வேந்தன் அநபாயன் தொண்டர் கள்சீர்
தமைப்பரவும் நூல் 'பெரியபுராணந்'
தன்னை
நேர்சொல்ல வியலாத வகைபா ராட்டி
நெஞ்சுருகப் புகழ்ந்திட்டான்; சிறப்புச்
செய்தே
பார்போற்றும் வகையினிலே கௌரவித்துப்
'பன்னிரண்டாம் திருமுறை' யாய் விளங்கச்
செய்தான்.

## நூல் மதிப்புரை

நூல் பெயர் : அருள்நெறி காட்டிய அமைச்சர் சேக்கிழார்

நூலாசிரியர் : செந்தமிழ்ப் பாவலர் கோவூர் இசைதாசன்

பக்கங்கள் : 80

விலை : ரூ. 10.00

வெளியிட்டோர்: எழில் பதிப்பகம்
82B. சன்னதி வீதி, கோவூர்
வழி மாங்காடு
சென்னை-602101

செந்தமிழ்ப் பாவலர் கோவூர் இசைதாசன் அவர்கள் தெய்வச் சேக்கிழார் வரலாற்றை முற்றிலும் கவிதையாகவே பாடிச் செஞ்சொற் கவி இன்பம் வழங்கியுள்ளார். இந்நூலின் சிறப்பிற்குச் சான்றாகவே அவர்தம் கவிதை நூலிலிருந்து பல முக்கிய பகுதிகள் இங்கு எடுத்து வழங்கப்பட்டிருக்கின்றன. இப்பயன்மிகு பக்திக்கவிதை நூலை அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டுகிறோம்.

# இசைக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம்

ஓய்வூதியம் கொடுப்பதற்காக இசைக் கலைஞர்களைத் தேர்வு செய்யக் குன்னக்குடி வைத்தியநாதன் உள்பட 5 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது பற்றி அரசு விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை நிர்வாகத்தின் கீழுள்ள திருக்கோயில்களில் பழங்காலம் முதல் இசைக்கப்பட்டு வருகின்ற பஞ்சமுக வாத்யம், கொம்பு, எக்காளம், பாரி நாயணம், தாரை, தப்பட்டை, உடுக்கை, ஜெய கண்டி, பேரி மற்றும் மத்தளம் போன்ற பல பெருமைமிக்க பழங்காலத்து இசைக்கருவிகளை இசைத்து 20 ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து 60 வயதினை கடந்து, ஓய்வு பெற்று தற்போது வறுமையில் வாடும் 100 இசைக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு, ஓய்வூதியம் 300 ரூபாய் வழங்கும் திட்டத்தினை மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தார்கள்.

அதனையொட்டி 'தமிழ்நாடு இசைக் கலைஞர்கள் ஓய்வூதிய திட்டம்' என்ற இத் திட்டத்தின் கீழ் தகுதியுள்ள ஓய்வு பெற்று வறுமையில் வாடும் 100 இசைக் கலைஞர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக தமிழக அரசு 5 உறுப்பினர்களைக் கொண்ட தேர்வுக் குழு ஒன்றினை அமைத்துள்ளது.

அதில் கீழ்க்கண்டவர்கள் அங்கம் வகிப்பார்கள்.

ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
—தலைவர்
குன்னக்குடி ஆர். வைத்தியநாதன்-உறுப்பினர்
அரசு இணை[துணை செயலாளர்
(அறநிலையத்துறை மற்றும்
வணிகவரி- அறநிலையங்கள்) - உறுப்பினர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை
ஆணையரின் நேர்முக உதவியாளர்
—உறுப்பினர்[அமைப்பாளர்

இத்தேர்வுக் குழுவில் பங்கு பெறும் அலுவலர் சாரா உறுப்பினர்களின் பதவிகாலம் மூன்று ஆண்டு காலமாக இருக்கும்.

இவ்வாறு அரசு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# "சென்றூதாய் கோத்தும்பி"

## சிங்கம்பட்டி இராஜா

''வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும்
பித்த உலகில் பிறப்போடு இறப்பெனும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய்
கோத்தும்பி''

—திருக்கோத்தும்பி-மணிவாசகம்.

தமிழ் இலக்கியங்களில் இளைஞர்கள் காதல் பரவசத்தில் அல்லது பிணக்குக் காரணம் கொண்டு தூது விடுவதைக்காண்கிறோம். அதில் தோழி மூலம் சொல்வதுடன் மான், அன்னம், கிளி, குயில், மயில் போன்ற மிருகம், மற்றும் பறவை இனங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன, வேறெங்கும் நாம் தும்பியின் மூலம் தூது சொல்வதை காண்பதற்கில்லை, அதுவும் மணிவாசகப் பெருமான் தும்பி என்று குறிப்பிடாமல் கோத்தும்பி என்று அரச வண்டிடம் தூது சொல்கிறார்.

ஆண்டவன், தனுகரண புவன போகங்களைக் கொடுத்ததுக் உயிர்கள் இவைகளை நுகர்ந்து நிலையாமையை உணர்ந்து உய்வு பெறுதற்காகும், மணிவாசகப் பெருமான், நந்தியின் அவதாரம் எனக் கருதப்படுவதாலே, அவர் நிலைக்கு மேலே குறிப்பிட்ட பாடலில் சொல்லப்பட்டுள்ள அனைத்தும் சித்த விகாரம் என்று கருதி, அம்மயக்கத்திலிருந்து விடுதலை அடைய உணர்த்திய வித்தக தேவரான சிவ பெருமானுக்கு அரச வண்டிடம் தூது விடுகிறார். தும்பியிடம் தூது சொல்வதே அரிதாக உள்ளதில் இவர் கோத்தும்பியிடம் சொல்வது சற்று வியப்பாகவே இருக்கிறது. காரண காரியமின்றி அவர் நிலையிலுள்ளவர்கள் ஒன்றை கூறமாட்டார்கள். பன்மொழிப் புலவரான காலஞ்சென்ற மேதகு கே.எம். பால சுப்பிரமணியம் அவர்கள் கூட அவரதுஆங்கில மொழி பெயர்ப்பில் Bumble Bee என்றே எழுதியிருக்கிறார். அரச வண்டென்பதற்கு அங்கு விளக்கம் வரவில்லை.

திருவள்ளுவருடைய குறட்பாக்கள் ஒன்றிரண்டுகளை ஆய்வு செய்தால் நம்மைப் போன்று சாதாரணம் அல்லாது மகான்கள், ஞானிகள், சித்த புருஷர்கள் காரணமின்றி சொற்களை உபயோகிக்க மாட்டார்கள் என்பது புலனாகும்,

''கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்கு தக''

''கற்க கசடற கற்க கற்றபின் நிற்க அதற்கு தகவென்று அவர் எழுதி இருக்கலாம் தானே? அப்படி இல்லை, கற்பவை என்பதற்கு நாம் ஆய்ந்து கற்கவேண்டியதைத்தான் கற்க வேண்டும். நம் அறிவிற்குத் தேவையானவையை மட்டும் கற்றால் போதும் என்கிறார். ''கண்டதைப் படிப்பவன் பண்டிதன் ஆவான்'' என்பது சரியில்லை. ''கண்டு அதை படிப்பவன் பண்டிதன் ஆவான்'' என்பது காலப்போக்கில் திரிபு ஆகியிருக்கிறது. மற்றும் எப்படி சிந்தனை வேறு கவலை வேறோ, சிக்கனம் வேறு கஞ்சத்தனம் வேறோ, போட்டி வேறு பொறாமை வேறோ, அன்பு வேறு பாசம் வேறோ, சர்ச்சை வேறு, தர்க்கம் வேறோ, காதல் வேறு காமம் வேறோ அதுபோல கற்பனை வேறு படிப்பது வேறு. தினசரி பத்திரிக்கையைப் படிக்கலாம் ஆனால் அதில் கற்பதற்கு அபூர்வமாகவே பொருள்கள் அமையும், அதைப்போலவே திருக்குறள் போன்ற நூல்களைப் படிக்க முடியாது, கற்க வேண்டும். சாதாரணமாகப் படித்தால் விளங்காது. ஆகவே கற்க என்பதற்கும் கற்பவை என்பதற்கும் நிரம்ப வேற்றுமை உள்ளது.

மற்றொரு குறள் ''தீயினால் சுட்ட புண் உள் ஆறும், ஆறாதே நாவினால் சுட்ட வடு'' தீயினால் சுட்ட புண் உள் ஆறும், ஆறாதே நாவினால் சுட்ட புண் என்று ஏன் எழுதியிருக்கக் கூடாது? புண் ஆறும், வடு ( sear ) மாறாது.

மற்றொன்று ''நாடாது நட்டலின் கேடில்லை, நட்டபின் வீடில்லை நட்பாள்பவர்க்கு''(குறள்) இதற்கு மிகுதியான ஆசிரியர் அவரவர் மனதிற்கு ஏற்றவாறு உரை எழுதியிருக்கிறார்கள். அதாவது தெரிந்து கொள்ளாது நட்புபுரிவதால் பாதகம் இல்லை என்று, அது அப்படி இல்லவே இல்லை. அதற்கு உண்மையான பொருள் - கேடில்லை என்பதற்கு

ஒ தைவிட வேறு கேடு இல்லை என்றுதான் நாம் பொருள் கொள்ளல் வேண்டும். ஏன் என்றால் உடனே அதற்கு அடுத்தபடியான குறள் என்ன சொல்கிறதென்று உன்னிப்பாகப் பார்க்கவேண்டும்.

''ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை
தான்சாம் துயரங் தரும்'' [கடைமுறை

ஆராய்ந்து அறிந்து உறவு ஒருவனுடன் நாம் கொள்ளவில்லை என்றால் அது நாம் சாகும்வரை துன்பத்தைத் தரும்.

இவைகளைப் பார்க்கும்போது கற்றறிந்த பெரியோர்கள் ஏனோ தானோவென்று உறுதியாக எழுத மாட்டார்கள் என்பது தெளிவு.

வெறும் தும்பி என்று சுட்டியிருக்கலாம். ஆனால் கோத்தும்பி என்கிறார் மணிவாசகப் பெருமான். கோவென்பதற்கு அரசன் என்று பொருள். தும்பி என்பது வண்டு,

'கந்துக மதக்கரியை வசமாய் நடக்கலாம்
கரடி வெம்புலி வாயையுங் கட்டலாம்
ஒரு சிங்கம் முதுகிற் மேல் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்டலாம்
வெந்தழலில் இரசம்வைத்து ஐந்து
லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணாமல் உலகத்துலாவலாம்
விண்ணவரை ஏவல் கொள்ளலாம்
சந்ததமும் இளமையோடிருக்கலாம்
மற்றொரு சரீரத்திலும் புகுதலாம்
சலமேல் நடக்கலாம் கனல் மேலிருக்கலாம்
தன்னிகரா சித்தி பெறலாம்
சிந்தை அடக்கியே சும்மாவிருக்கின்ற திறன்
சத்தாகி என் சிந்தை மிசை [அரிது
குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோமயானந்தமே.

—தாயுமான சுவாமிகள்

1. 'கந்துக மதக்கரியை வசமாய் நடத்தலாம்' (கந்துகம் — Tethering ) முளை அ[illegible]து கட்டிற்குட்பட்டு வைக்கப்பட வேண்டிய யானையை நாம் விரும்பியதுபோல் ஏவல் புரிய செய்யலாம்.

2. ''கரடி வெம்புலி வாயையும் கட்டலாம்''

காட்டு வழி செல்கிறவர்கள் இன்ன இன்ன இடம் எல்லை என்று மனதில் குறிப்பிட்டு அதற்குள்பட்ட இடத்தை மாந்திரீகத்தால் கட்டிவிட்டு உள்ளே புகுந்தால் துஷ்ட மிருகங்களின் தொந்தரவு உறுதியாகயிராது. காட்டு வழி கழிந்தோ அல்லது உள்சென்று மீண்டும் திரும்பிய உடன் கட்டை அவிழ்த்து விட வேண்டும். இல்லையென்றால் அது மிகப் பெரிய பாவம், கட்டவிழ்த்துவிடும் வரை அம்மிருகங்கள் உணவருந்தாது. இச்செயற்பாட்பாட்டை நான் நேரிலேயே கண்டிருக்கிறேன். இதுவும் 64 கலைகளில் இந்திரஜாலம் மற்றும் மகேந்திரஜாலம் என்ற ஒன்றில் உள்ள முறையாகும்.

3. ஒரு சிங்கம் முதுகிற்மேல் கொள்ளலாம்—ஸ்ரீவைகுண்டத்தைச் சார்ந்த (தற்போது சிதம்பரனார் மாவட்டம்) ஸ்ரீலஸ்ரீ குமரகுருபரர் ஸ்வாமிகள், மீனாட்சி பிள்ளைத் தமிழ், கந்தர் கலி வெண்பா பாடியவர், மற்றும் கங்கை கரையில் சகலகலாவல்லி மாலை பாடி காசி நகர் நவாப்புடன் பேசுவதற்கு என உடன் ஹிந்தி மொழி பேசும் ஆற்றல் பெற்றவர். காசி மாநகர் நவாப் சிம்மாசனத்திலமர்ந்து தன்னை மதிக்காத காரணத்தால் நினைத்த மாத்திரத்தில் சபையுள் ஒரு சிங்கம் நுழைந்து எல்லோரும் அலறி புடைத்தோட இவர் இலாவகமாக சிங்கத்தின் மேல் ஏறி உட்கார்ந்து கொண்டார். இதுவும் ஏறத்தாழ மூன்னூறு ஆண்டுகளுக்கு முன் நடந்த உண்மையான நிகழ்ச்சி

4. கட்செவி எடுத்தாட்டலாம்—நாகத்தை நம் சொற்கேட்டு நடக்கும்படி செய்யலாம்.

5. வெந்தழலில் ரசம் வைத்து ஐந்து லோகத்தையும் வேதித்து விற்றுண்ணலாம்—ஐந்து அடிப்படை பூதங்கள் முறையே நிலம், நீர், தீ, வளி, வெளி, இவ்வைந்து லோகத்தையும் வெந்தழலின் மேல் பாதரசத்தை வைத்து (Medium) இவை ஒன்றொன்றையும் அதன்மேற்கொண்டுவைத்து அதன் உள்ளடக்கியிருக்கும் ஒவ்வொரு பொருளையும் தனித்தனியாகப் பிரித்து இச்சித்தது போல் செயல்படுத்தலாம். லாட சாமியார்கள், அல்லது பைராகிகள் என அழைக்கப்படுகிறவர்கள் இம்முறைகளை கையாளுவார்கள் எனக் கேள்விப்படுகிறோம்.

6. வேறு ஒருவர் காணாமல் உலகத்தில் உலாவலாம்—திருவனந்தபுரம் மூலம் திருநாள் மகாராஜா அவர்கள் காலத்தில் அஞ்சன மை வைத்துக் கொண்டு மற்றவர்கள் கண்ணிற்குத் தென்படாமல் மகாராஜா அவர்கள் இலை முன் அமர்ந்து ஒருவன் உணவு உண்டதாகவும் நுண்மதிநுட்பம் படைத்த அமைச்சர் ஒருவர் சந்தேகித்து சுடச்சுட உணவை பரிமாரச் சொல்லி வெப்பில் நெற்றியில் வைத்திருந்த மஞ்சனம் உருகி அழிந்து காளி புலையன் என்ற மாயாவி பிடிப்பட்டதாகவும் காதுவழிச்செய்தி உலகத்தில் நிலவுகிறது.

7. விண்ணவரை ஏவல் கொள்ளலாம்—எப்போதுமேவிண்ணிலே கந்தர்வர்களும் வானவர்களும் உலவி வருகிறார்கள். சாரதா திலகம், பிரபஞ்சசாரம் போன்ற மந்திர சாஸ்தர நூல்களில் கூறியிருக்கிற சில மந்திரங்களை குருவாயிலாகப் பெற்று உருவேற்றி பிரயோகப்படுத்தினால் விண்ணவர்களின் நிழல் தரையில்படுமாறு நம் கண்ணுக்குப் புலப்படும். பின் நாம் ஓடிச் சென்று அந்நிழலில் நின்றோமானால் அவர்கள் கீழ் இறங்கி வந்து நம்மிடம் பேசுவார்கள். இதையும் சமீப காலம் வரை நம்மிடையே இருந்த பெரியவர்கள் கையாண்டு தீர்க்க முடியாத சிலருடைய வியாதிகளுக்கு குணம் கண்டிருக்கிறார்கள்.

8. சந்ததும் இளமையோடிருக்கலாம்— Paul Brunton என்ற ஆங்கிலேயர் ஸ்ரீலஸ்ரீ காஞ்சி பெரியவாளின் அறிவுரை பேரில் இரமண மகரிஷியை சந்திப்பதற்கு முன் அடையார் பாலத்தில் ஒரு தபசியை சந்தித்து அவரின் வயது சுமார் 40 இருக்குமோவென்று கேட்டபோது அவர் தன் வயது 300 என்று குறிப்பிடுகிறார்.

9. மற்றொரு சரீரத்திலும் புகுதலாம்—தென் அமெரிக்காவில் Zombie என்று ஒரு அபூர்வ மந்திரவாத முறை இன்றளவும் கையாளப்பட்டு வருகிறது. அதாவது ஒருவனைக் கொன்று, கொன்றவன் உயிரை மேலுலகங்களுக்கு போகவிடாமல் தடுத்து, மீண்டும் இறந்த உடலிலேயே உட்புகுமாறு செய்வித்து, தனக்கு வேண்டாத எதிரிகளை அழிக்கும்படி செய்து பின் அப்பிணம் யார் கையிலும் அகப்படாமல் கடலுள் சென்று அழித்துவிடுவது. இச்செயல் முறையை யாரும் கண்டு விவரிக்க முடியாததால் புலன் விசாரனைக்கு அடைபடவில்லையாம். மாடு மேய்க்கும் மூலன் உடலில் சுந்தரநாதர் அக்காலத்தில் யோக முறையின் அடிப்படையில் புகுந்தார் என்பது வரலாறு.

10. ஜலமேல் நடக்கலாம்-ஜல ஸ்தம்பம், கங்கை கரையில் அமர்ந்து இருந்த இராம கிருஷ்ண பரமஹம்ஸர் பார்த்துக் கொண்டிருக்க ஒரு அடையோகி கங்கை பிரவாகத்தின் மேல் நடந்து வந்து சந்தித்தார். எத்தனை ஆண்டுகள் இதற்காக நீங்கள் பயிற்சி செய்தீர்கள் என பரமஹம்ஸர் கேட்க, இவர் சுமார் 20 ஆண்டுகள் பயிற்சி செய்தேன் என்றார். நாலணாவை கொடுத்தால் தோணியில் கடந்து விடலாமே, நீங்கள் இதுகாறும் வாழ்நாளை வீணாக்கி விட்டீர்களேவென்று வருந்தி உய்வு பெற உபதேசித்தார் என வரலாறு உண்டு.

11. கனல் மேலிருக்கலாம்— திருக்குறளுக்கு உரை எழுதியதாகக் கருதப்படும் பரிமேலழகரின் இளமைப் பெயர் அழகர். அவர் வெங்கல குதிரை ஒன்று செய்து அதனடியில் நெருப்பிட்டு, பின் குதிரை மேலமர்ந்து உரை எழுதியதாகச் சொல்லப்படுகிறது. இதுவும் ஒரு அரசனின் கட்டளையை ஏற்று நடந்த காரியமாகும்.


12. தன்நிகரில்லா சித்தி பெறலாம்— சித்தர்கள் எனப்படுவர் மக்களினத்தில் தோன்றியவர்களேனும், தம் தவயோக ஆற்றலால், அஷ்டமாசித்துகள் கை வரப்பெற்றவர்கள்.

| | |
|---|---|
| அணிமா | —அணுபோலச் சிறியதாதல் |
| மகிமா | —மேரு போலப் பெரிதாதல் |
| இலகிமா | —காற்றுப்போல் இலேசாதல் |
| கரிமா | —பொன் போல் பளுவாதல் |
| பிராப்தி | —எல்லாவற்றையும் ஆளல் |
| வசித்துவம் | —அனைவரையும் வசப்படுத்தல் |
| பிராகாமியம் | —கூடுவிட்டுக் கூடு பாய்தல் |
| ஈசத்துவம் | —விரும்பியதை செய்து முடித்து அனுபவித்தல் |

இறுதியாக தாயுமான ஸ்வாமி என்ன சொல்கிறார். இவ்வளவையும் செய்யும் ஆற்றல் படைத்த மனிதனுக்கு ஒன்றும் மட்டும் செய்வது அரிது என்கிறார். அதுதான் மனம், விழிப்புநிலை அல்லாத உறங்கும் நிலையிலும், ஸ்வப்பனத்தின் நடுவேயும் அலைபாயும், அடங்காது.

ஒரு ஊரில் தனவந்தர் ஒருவர் உள்ளூர் கோவிலுக்கு அறங்காவலர் பதவி ஏற்று நடத்தி வந்தார். கணக்குகளை சரிபார்த்தபோது 'சும்மாவிருக்கும் சாமியாருக்கு சோத்துக் கட்டி மூன்று' என எழுதப்பட்டிருந்தது. 'சும்மாவிருப்பவர்க்கு சோற்று கட்டி மூன்று கொடுப்பானேன், நிறுத்திவிடு' என உத்தரவு பிறப்பித்துவிட்டார். எங்கோ வெளியூர் சென்று திரும்பிய சாமியாரிடம் விபரம் அறிவிக்கப்பட்டது. மாலையில் பண்ணையார்-அறங்காவலர் வந்தார். அவரை துறவி அணுகி விபரம் கேட்டார். 'ஆமாம், உமக்கு எதுக்கு சும்மா சோறு போட வேண்டும்' 'நீர் உழவாரப் பணி செய்யும், அல்லது கோவில் பிரகாரத்தைக் கூட்டி சுத்தம் செய்யும், அல்லது நந்தவனத்திற்கு தண்ணீர் எடுத்து விடும்', சும்மாவிருப்பதற்கு உணவு அளிக்கப்படமாட்டாது' என்றார். 'பண்ணையார் சொல்வது முற்றிலும் உண்மை தான். இனிமேற்கொண்டு அதிகாரிகள் சொல்லும் பணிகளைக் குறைவின்றி செய்கிறேன். ஆனால், என்று இழுத்தார். 'என்ன ஆனால்'? என்றார் பண்ணையார்! 'குற்றமாகக் கருத மாட்டீர்களென்றால் கூறுகிறேன்' என்றார். 'சும்மா சொல்லும்' என்றார் பண்ணையார், 'நீங்கள் சற்று நேரம் சும்மா இருந்து பாருங்களேன்' என்றார் துறவி. அதென்ன பெரிய காரியமா!' என்று தியானத்தில் அமர்ந்தார் பண்ணையார். Para - Psycology போன்றவைகளை அறிந்த துறவி, 'ஐயா இன்று நம் தோப்பில் தேங்காய் பறிக்கிறார்களே, ஏதேனும் களவு போய்விடக்கூடாது என்று இப்போது நினைக்கலாமா!' என்றார். சாமியாரை ஏற இறங்க பார்த்துவிட்டு, மீண்டும் மனம் குவியுமா என்று பார்த்து சரி செய்து உட்கார்ந்து பார்த்தார். சற்று வினாடிகளுக்குள் 'ஐயா, ஆசை கிழத்தி வீட்டிற்குச் செல்ல நேரமாகி விட்டதேவென்று நினைக்கலாமா' என்றார் சாமியார். ஒன்றும் புரியாமல் பண்ணையார் கோவில் நிர்வாகஸ்தர்களை அழைத்து வழக்கமாகக் கொடுக்கும் உணவை சாமியாருக்கு கொடுத்துவிடுங்கள், இவர் வேலை பார்த்தாலும் சரி, வேலை பார்க்கவில்லை என்றாலும் சரி என்று கூறி அங்கிருந்து அகன்றுவிட்டார்.

'வைத்த நிதி, பெண்டீர், மக்கள், குலம், கல்வி' ஒன்றும் கடைசி நேரத்தில் உடன் வராது'' காதறுந்த ஊசியும்கூட வராது காண்' என்றார் பட்டினத்தடிகள். ஆகவே மன வண்டே இந்த சித்தவிகாரத்தைசதா நினைந்து ஏன் ஓயாது அலைகிறாய்! இக்கலக்கத்தை தெளிவித்த வித்தகத் தேவரான சிவபெருமானிடம் பறந்து சென்று எனது நன்றியை கூறு என்கிறார். ஆகவே மனதை அரச வண்டென்பதை எல்லாராலும் ஏற்க தகுந்ததாகவே இருக்கின்றது தானே!



# தர்மம் காக்கும் சக்தி வடிவம்


டாக்டர் கரு. நாகராஜன், எம்.ஏ., பிஎச்.டி.,
நாட்டுநலப் பணித்திட்ட இயக்குநர்,
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-600 005.

வானில் ஓடும் மேகம், இங்கு வந்து வாழ்த்துக்
கூறுது
தேனைச் சிந்தும் மலர்கள் யாவும் சிந்துக்
கவிதை பாடுது
கானில் பாயும் நதிகள் கூடக் கடவுள் நாமம்
போற்றுது
ஊனும் உயிரும் உருகிப் பக்தி உலகம் அருளை
நாட்டுது.

கோயில் வாழும் சிலைகள் யாவும் கூடி
ஒன்றாய் நடிக்கிது
வாயில் லாத சுவர்கள் கூட வாழ்த்துக் கூறத்
துடிக்கிது
ஆயி ரங்கள் ஆண்டு சென்ற அழகு மாடக்
கோபுரம்
தூய வண்ண ஆடை போர்த்திச் சொல்லும்
அன்பை நாற்புறம்.

ஓய்ந்த கோயில் மணியின் நாதம் திரும்ப
இன்று ஒலிக்கிது
தோய்ந்த பக்திப் புலவர் சொன்ன பாட்டின்
உண்மை பலிக்கிது
காய்ந்து போன மனிதர் நெஞ்சில் பக்தி
வெள்ளம் பாயுது
தேய்ந்து போன அன்பு வானில் நிலவு மீண்டும்
காயுது.

ஆறு கால பூசை யோடு கோயில் வீதித்
தேர்வலம்
மாறு பாடு கொண்ட வர்க்கும் மனத்தில் பக்தி
ஊர்வலம்
வீறு கொண்டு நாட்டை ஆண்ட வேந்தர்மூவர்
காலமே
மாறி மீண்டும் வந்த தென்று மகிழும் இன்று
ஞாலமே.



பக்தி உலகம் தமிழ கத்தில் பண்ணி வந்த
பூசையால்
சக்தி வடிவம் ஆளு திங்கு, தர்மம் காக்கும்
ஆசையால்.
முக்தி காட்டும் கோயில் யாவும் புதுமைத்
தோற்றம் பூணவே
யுக்தி கண்டு வெற்றி கண்ட முதல்வர் வாழ்க
வாழ்கவே;

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை. சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M. A. Ph. D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002

சென்னை அருள்மிகு ஏகாம்ப ரேசுவர் ஆலயத்தில் ஜெபயோக விழா வின் தொடக்க விழா 16-12-94 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் இ. மதுசூதனன் அவர்கள் இவ்விழாவில் பங்கேற்று ஜெபயோ கத்தைத் தொடக்கி வைத்துச் சிறப் பித்தார்கள். ஆலய நிர்வாக அதிகாரி திரு. ஈஸ்வரமுத்து அவர்களும், அறங் காவலர் குழுத் தலைவர் எம். பி. இருசப்பன் அவர்களும் விழா ஏற்பாடு களைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.





# மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் தெரிவித்த 1994 புத்தாண்டு நல்வாழ்த்து




R. RAJU,
by Commissioner H.Qrs.
(Retired)
HR&CE Administration Dept

§

'மலர்கின்ற புத்தாண்டு தமிழகத்தில் உள்ள மக்களின் மனதில் மகிழ்ச்சியையும், அவர்தம் இல்லங்களில் வளங்களையும் கொண்டு வந்து சேர்க்கும் என்ற எனது ஆழ்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்தி, இவ்வினிய புத்தாண்டினை அகமகிழ்ந்து கொண்டாடும் அனைத்துத் தரப்புமக்களுக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை அன்னையின் அருளால் நீர் வளமும், அதனால் அனைத்து வளங்களும் பெருகியுள்ள மகிழ்ச்சியான சூழ்நிலையில் தொடங்குகின்ற இப்புத்தாண்டு, நாம் மேற்கொள்ளும் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி அடைய துணை நிற்கும் என்று நம்புகிறேன்.

தமிழகத்திலுள்ள அனைத்து மக்களும், தொய்வில்லாத முன்னேற்றம் அடையவேண்டுமென்ற இலக்கை நோக்கி நாம் மேற்கொண்டுள்ள பயணத்திற்கு தேவையான ஆற்றலையும், நெஞ்சுரத்தையும் இந்த புத்தாண்டு வழங்க வேண்டுமென்ற எனது பேராவினைத் தெரிவித்துக் கொண்டு, தமிழக மக்கள் அனைவருக்கும் எனது உளங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

§